மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 3 | 15 - 12 - 54 | இதழ் 16

கயானா புரட்சித் தலைவன்

டாக்டர் ஜகன்

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

அரண்மனையில் வாழ்ந்த கட்சி ஆலமரத்தடிக்கு வந்தது!

1910-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சி (தென்னிந்திய நலவுரிமைச்சங்க்) மாநாட்டில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் கட்சியின் தலைவராகவும், அறிஞர் அண்ணா அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெரியார் அவர்கள் தலைமையின் கீழ் நீதிக்கட்சி வந்தகாலத்திலிருந்தே, அதாவது 1938-லிருந்தே, பெரியார் இராமசாமியும், அறிஞர் அண்ணாவும் அரசியல் கருத்துக்களோடு பொருளாதார—சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் நாட்டில் பரப்பலாயினர். சுருங்கக் கூறின் மாளிகையிலே மட்டும் உலாவிவந்த கட்சியை மரத்தடிக்குக் கொண்டுவர விரும்பினர்.

பொருளாதார—சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்குப் பிற்போக்கு வாதிகளாய் விளங்கிய நீதிக்கட்சியைச் சார்ந்த சில பழைய பிரபுக்களும், பணக்காரர்களும், பட்டதாரிகளும் நீதிக்கட்சியின் தலைமைப் பதவியைப் பெரியாரிடத்திலிருந்து பிடுங்கிவிடவேண்டும் என்று எண்ணினர்; அதற்கான முயற்சிகளையும் செய்தனர்.

1944-ம் ஆண்டில் சேலத்தில் நீதிக்கட்சி மாநாடுகூட்ட ஏற்பாடு ஆயிற்று. அந்த மாநாட்டில் பெரியார் அவர்களின் தலைமையை மாற்றி, அந்தப் பதவிக்குக் காலஞ்சென்ற சர் ஆர். கே. சண்முகம் அவர்களையாவது அல்லது வேறு எந்தப் பிரபுவையாவது கொண்டுவர சில பிரபுக்களும், பிரபுக்களை அண்டினோரும் ஆதரவு தேடும் படலத்தைத் துவக்கினர். பிரபுக்களின் போக்கு பெரியாருக்குக் கலக்கத்தையும், வேதனையையும் தந்தது. நீதிக்கட்சியை விட்டுவிட்டு சுயமரியாதை இயக்கத்திலேயே தம் கவனத்தைச் செலுத்தலாமா என்றுகூட பெரியார் அவர்கள் எண்ணினார்கள். அந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள், "நீதிக்கட்சியிலிருந்து பதவிவேட்டைக்காரர்களை நாம் விரட்டவேண்டுமேயொழிய நாம் நீதிக்கட்சியை விட்டு விலகக்கூடாது" என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். அரண்மனையிலிருந்த கட்சியை ஆலமரத்தடிக்குக் கொண்டுவரவே அறிஞர் அண்ணா அவர்கள் அரும்பாடுபட்டார்கள்; அதற்கான முறையில் முயன்றார்கள்.

'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' என்ற கட்சியின் பெயரை **'திராவிடக் கழகம்'** என்று மாற்றியமைக்கும் தீர்மானத்தையும், அரசாங்கம் தந்துள்ள கவுரவப் பட்டங்களையும், பதவிகளையும், கழக உறுப்பினர்கள் துறந்துவிடவேண்டும் என்றும், அப்படித்துறக்க வில்லையானால் அத்தகையோர் கழக உறுப்பினர்கள் ஆகமாட்டார்கள் என்றும் கருத்தமைந்த தீர்மானத்தையும் 1944-ம் ஆண்டில் சேலத்தில் நடந்த நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில், அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். பட்டம்—பதவி வேட்டைக்காரர்கள் கட்சியைவிட்டு ஓடினர்; கட்சி பாட்டாளி மக்கள் கைக்கு வந்துசேர்ந்தது. அறிஞர் அண்ணா அவர்களின் குறிக்கோள் வெற்றிகரமாக ஈடேறியது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

15 - 12 - 54 புதன்கிழமை

நாடகக் கொலை மசோதா!

இராம - இராவண யுத்தத்தில், பலமிக்க தொரு அம்புபட்டு தம்பி இலட்சுமணனும் வானர வீரர்களும் மூர்ச்சையாகிவிட அவர்கள் வீழ்ந்துகிடப்பது கண்டு இராமமூர்த்தி அழுது புலம்பி சோர்ந்துவிட்டாராம். அப்பொழுது அருகிலிருந்த அனுமந்த மூர்த்தி வீழ்ந்து கிடந்தோரை எழுப்பிட சஞ்சீவி மூலிகையைத் தேடிச் சென்றாராம். காற்றில் பறந்து, கடலைத் தாண்டி மூலிகை இருக்கும் மலைக்கு வந்தார். ஆனால் மூலிகையைத் தேடுவதற்கு நேரமில்லாமல், மிகுந்த அவசரத்தில் மூலிகை இருந்த மலையைப் பெயர்த்தெடுத்து வந்தாராம் இராம தூதர், வானரவீரர்.

அனுமார் செய்யும் வேலைகளில் சென்னை மாநில நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம் தற்பொழுது ஈடுபட்டிருக்கிறார். புலம்பிடும் இராமனைக் காப்பாற்றிட, மூர்ச்சையாகிக் கிடக்கும் வானர வீரர்களை, இராமபக்தர்களை, புராண இதிகாசத் தேவதைகளை அபயங்கொடுத்து எழச்செய்ய, சஞ்சிவி மூலிகையைத் தேடும் படலத்தில் அவர் இருக்கிறார். காலப்போக்கில் முன்னேற்றக் கருத்துக்கள் பரவியுள்ள நிலையில், தமிழ் நாட்டு நாடகக்கலையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியில், புராண நாடகங்கள் பல மறைந்துவிட்டன, சில மூர்ச்சையாகிக் கிடக்கின்றன; புராணத்தில் காணப்படும் ஆபாசங்கள் கேலிக்குரியனவாய்விட்டன. வானர வீரர்கள் வீழ்ந்துகிடப்பதைப் பார்த்து சக்ரவர்த்தி திருக்குமாரன் புலம்பியதைப் போல, சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் "ஐயோ! புராணங்களுக்கு மதிப்பு போய்விட்டதே! புராண நாடகங்கள் மறைகின்றனவே!" என்று புலம்புகின்றார். வில் பிடித்த இராமபிரானுக்கு வால் தூக்கி பறந்துசென்று அனுமார் பாடுபட்டதுபோல, ஆச்சாரியாரின் சோகத்தைப் போக்க, கனம் சுப்பிரமணியம் பாடுபடுகிறார். புதுமை நாடகங்களை அழிக்க, புராண நாடகங்களைப் பாதுகாக்க வழிதேடுகிறார்; தக்க மூலிகையைத் தேடி, மலையைப் பெயர்க்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கிறார்.

புராண நாடகங்களுக்கு எதிராகப் புது நாடகங்கள் வளருவதைக் கண்டு, பக்த கோடிகள் சீறிப்பாய்ந்தனர், துள்ளிக் குதிக்கின்றனர். கோபக்கணைகளை அள்ளி வீசுகின்றனர். அந்த பக்த சிகாமணிகள் கூட்டத்துக்குப் பிரதிநிதியாக, நிதி மந்திரியார் கச்சைகட்டிக் கொண்டு புறப்பட்டுள்ளார். புராண நாடகங்களைப் பாதுகாக்க, புது நாடகங்களைத் தடை செய்ய நாடகக்கலை மசோதா ஒன்றை, சென்னை சட்டசபையில் முன்வைத்துள்ளார். எப்பாடு பட்டேனும் இந்த சட்டசபை முடியுமுன் அது சட்டமாகி அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று துடிதுடிக்கின்றார்.

சட்டத்தின் அவசியத்தை முன்மொழிந்த மந்திரி, சட்டம் வரவேண்டியதன் அவசரத்தைவலியுறுத்தியுள்ளார். புராணக் கதைகள், புராண நாடகங்கள், புராணத்தில் வரும் தெய்வங்கள் இவைகள் கேலிக்குரியதாக்கப்பட்டுள்ளன. அதைத் தடுக்க கனம் சுப்பிரமணியம் சட்டம் கொண்டுவருகிறார்.

ஆபத்தில் சிக்கியவர்களின் கூக்குரல் கேட்டு, அபயமளித்து நமது ஆண்டவர்கள் காப்பாற்றியதாகக் கூறும் புராணக் கதைகள். அந்தப் புராணக்கதைகளுக்கு, ஆண்டவர்களுக்கு, அபயமளித்துக் காப்பாற்ற கனம் சுப்பிரமணியம் வந்துள்ளார். சர்வாபரண கோலத்தில் பகவான் தோன்றி, சக்ரத்தைவீசியெறிந்து, காப்பாற்றுவார். மந்திரிக் கோலத்தில் இருக்கும் கனம் சுப்பிரமணியம் சட்டத்தை வீசியெறிந்து பகவான்களை இந்தப் "பாவி"களிடமிருந்து காப்பாற்ற முனைந்துள்ளார்.

நடிகவேள் ராதா நடத்தும் "இராமாயணம்" நாடகம் இராமச்சந்திரமூர்த்தியை கேலி செய்வதாக இருக்கிறதாம். புராணக் கதையை, புண்ணிய மூர்த்தியை ஆபாசப்படுத்துகிறதாம். அது கண்டு இராம பக்தர்கள் கோபங்கொண்டுள்ளார்கள். இராமதூதர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கி, நாடகக்கொட்டகை முன் அமளி செய்துள்ளனர். சுவரைத் தாவும்படலம், கல்லைத் தூக்கும் படலம், வாலைச் சுழற்றும்படலம், பல நிகழ்த்தியுள்ளார்கள்.

புராணக் கதைகளை யாரும் ஆபாசப்படுத்தவில்லை. உண்மையில் யாரும் முயன்றால்கூட

ஆபாசப்படுத்தமுடியாது. அந்த அளவு புராணக்கதைகள் ஆபாசக் களஞ்சியங்களாக, அருவருக்கும் சம்பவங்கள் நிறைந்தனவாக இருக்கின்றன. இராதாவின் இராமாயண நாடகத்தை எதிர்த்துப்பேசியோரும் ஏசியோரும், அதில் எந்தெந்த இடத்தில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாமல் சொந்தமாக, ஆபாசப்படுத்தும் முறையில், சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக்காட்டி தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தால் அது நலமாயிருந்திருக்கும். ஆனல் வெறும் கூச்சலில், ஆர்பாட்டம் செய்வதை மட்டும் குறிக்கோளாக அவர்கள் கொண்டுள்ளனர். அவர்களுக்கு உதவியாக மாநில அரசியலாரின் போக்கும், கொண்டுவரும் சட்டமும் உள்ளன.

ஆபாச நாடகமென்ருல், நாடகத்தில் வரும் ஆபாசக் கருத்துக்களையோ, காட்சிகளையோ, தடை செய்வதைப் பற்றி யாருக்கும் எதிர்ப்பு இருக்காது. ஆனல் அரசியலார் எதை மிகவும் வலியுறுத்துகிருர்கள் என்ருல், புராணத்தில் இருக்கும் ஆபாசங்களை வெளிப்படுத்தும் நாடகங்கள், கருத்துகள், இருக்கக் கூடாது என்பதுதான்.

பதினெட்டு வயதுச்சிடனுக்குக் குருபத்தினி எண்ணெய் தேய்த்திட, காமன் மறைந்து நின்று அம்பை ஏவிட, சிடன் குருபத்தினியின் சேலையை இழுத்திட, அந்தப் பத்தினி புடவையை நெகிழவிட்டு, நிர்வாணக் கோலத்தில் ஓடிடும் காட்சி—“தாராசசாங்கம்” நாடகத்தில் காட்டப்படுகின்றன. எத்தகைய ஆபாசக் காட்சி, அதைவிட எத்தகைய அருவருக்கத்தக்க கருத்து. ஆபாச நாடகம் என்று கூறினல், தாராசசாங்கம் நாடகம் தடைப்பட்டிருக்கவேண்டும்.

நிர்வாணக் கோலத்துடன் கோபியர் கீழே நின்று “கிருஷ்ண! கிருஷ்ண” என்று முறையிட, மரக்கிளையில் உட்கார்ந்து கிருஷ்ணன் வேணுகானம் பயிலும் காட்சி—“கிருஷ்ணலீலை” நாடகங்கள் புராணக் கதைகளுக்கு மதிப்பையாத் தருகின்றன? அவற்றைச் சிறுவர்களோ, இளைஞர்களோ, பார்த்தால் அவர்களுக்குப் பக்திப்பரவசமா உண்டாகும்?

ஆபாசச் சம்பவங்களை, ஆபாசக் கருத்துகளை, ஆபாசப் பேச்சுகளைப் புராணக் கதைகளில் புரான நாடகங்களில் தவிர வேறெதிலும் காணமுடியாது. பக்தர்களுக்கு ஆண்டவனிடம் இருக்கும் பக்தி உண்மையானல், ஆண்டவர்களை இழிவுபடுத்தும் புராண நாடகங்களை புராணக் கதைகளைத் தடைசெய்யவேண்டும். ஆண்டவர்களை அவமதிப்பது, அலோகங்கப்படுத்துவது, காமுகனைச் சித்தரிப்பது, கையாலாகாதவனைக் காட்டுவது எல்லாம் புராணக்கதைகள்தாம். ஆண்டவனிடம் உண்மையான மதிப்பு, கொண்ட பக்தர்கள், “தாராசசாங்கம்” “கிருஷ்ணலீலா” “பக்த அகல்யா?” “பக்த அனுசுயா” நாடகங்கள் நடைபெறும் இடங்களில் போய் “இந்த நாடகங்கள் நமது ஆண்டவர்களை இழித்தும் பழித்தும் பேசுகின்றன” என்று மறுத்துப் பேசவேண்டும் மக்களுக்குத் தெளிவை யுண்டாக்கவேண்டும்.

இன்று ஆச்சாரியாரோ, இந்துமகாசபை மகாலிங்க ஐயரோ “ஆண்டவனுக்கு ஆபத்து, இந்துமத ஆசாரத்துக்கு ஆபத்து?” என்று அலறித்துடிக்கிருர் என்ருல், அது ஆண்டவர்களுக்கோ, மத ஒழுக்கத்துக்கோ ஆபத்து என்று அவர்கள் கவலைப்படுவதால் அல்ல. பிராமணர்கள் எவரும் கடவுளைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. “தாங்களே பிரமம்!” “தாங்களே பூதேவர்!” என்று நம்பிக்கையுடையவர்கள். இப்பொழுது புராண நாடகங்களுக்கும், புராணக் கதைகளுக்கும், புராணக் கருத்துக்களுக்கும், மதிப்புக் குறைந்ததால், அவர்களுடைய கலாசாரத்துக்கு மதிப்புக் குறைந்து வருகிறது. அவர்களுடைய இனம் காப்பாற்றி வந்த உயர்வு தாழ்கிறது. அதனல்தான் அவர்கள் ஆத்திரத்துடன் பேசுகின்றனர், அரசியலாரைச் சட்டஞ்செய்யச் சொல்லித் தூண்டுகின்றனர்.

புராணக் கதைகளில் இவர்களுக்கு உண்மையில் நம்பிக்கையிருக்குமானல், புதுமை நாடகங்களுக்குப் போட்டியாக புராண நாடகங்களை ஆடிக்காட்ட வேண்டும். அதற்கு வசதியும், வாய்ப்பும், பத்திரிக்கை பலம், தலைமைதாங்கிப் புகழ்ந்துபேச மந்திரிகளும் ஏராளமாக இருக்கின்றனர். ஆனல் அதில் வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்குப் போய்விட்டது. அதனல் வளர்ந்துவரும் புதுமைக் கருத்துக்களை—தமிழ் நாடகத்தை தடைமூலம் அழித்துவிடப் பாடுபடுகின்றனர்.

புராணத்தில் வரும் கதாபாத்திரங்கள் கேலி செய்யப்படுகின்றன வென்ருல், அந்த கேலியும் கிண்டலும் அந்தப் புராணங்களிலிருந்து தான் எடுக்கப்படுகின்றன. இராதாவின் “இராமாயணம்” சொந்தக் கற்பனையல்ல, வால்மீகி இராமாயணத்தைப் பின்பற்றி காட்

டப்பட்டது. எனவே நாடகத்தை தடை செய்யும் முன், வால்மீகி இராமாயணத்தைத் தடை செய்யவேண்டும். மேலும் அவர்களுடைய பக்தி எவ்வளவு பலவீனமாயிருக்கிறது பாருங்கள்! "பக்த இராமாயணம்" "சம்பூர்ண இராமாயணம்" "பாதுகா பட்டாபிஷேகம்" என்று இராமாயணத்தை எவ்வளவோ தடவை நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில், பார்த்திருக்கிறார்கள்! ஒரு தடவை, வால்மீகி சொல்லியிருக்கிறபடி "இராமாயணத்"தைப் பார்த்தால் தான் என்ன? அவர்களுக்கே தங்களுடைய இராமன்மீது பயம், சந்தேகம்! எனவே தங்களது பயத்தை மறைக்க மாற்றுக்கட்சியினர் மீது பாய்ந்துவருகின்றனர். சட்டசபையில் திட்டங்கள் தீட்டுகின்றனர்.

நாடகக்கலை மசோதா மற்ற மாநிலங்களில் எங்கும் இல்லை. சென்னை மாநிலத்தில் மட்டும் கொண்டுவருகிறது. அரசியலார் தங்களுக்குப் பிடிக்காத நாடகங்களைத் தடைசெய்யும் எதேச்சாதிகாரத்தை சென்னை மாநிலம் மட்டும் கொண்டுவருகிறது.

அறிஞர் அண்ணு அவர்களின் தனி முயற்சியால், தமிழ்நாட்டு நாடகக்கலையில் புதியதொரு முன்னேற்றமும், மறுமலர்ச்சியும் உண்டாயின. அந்த முன்னேற்றத்தை, மறுமலர்ச்சியை அழிக்கும் நோக்கத்துடன் நாடகக்கலை மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

அதிகாரத்திலிருக்கும் அரசியல் கட்சியின் பிற்போக்குத்தன்மை, பொருளாதார நெருக்கடியால் நாட்டில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள், சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் இவைகள் மக்கள் மனதில் புயலைத் தூவி வருகின்றன. எனவே அன்ருட வாழ்க்கையில் காணும் சீரழிவுகளைச் சுட்டிக்காட்டும் சமூகப் படங்களோ, நாடகங்களோ, மக்களின் மனதைக் கவர்ந்துவிடுகின்றன. அன்றியும் புராணக் கருத்துக்களில், பழமை, மூடநம்பிக்கை, விதி இவைகளில் ஆழ்ந்துகிடக்கும் மக்களின் கவனத்தை சமுதாயத்தில் இருக்கும் குறைபாடுகளுக்குத் திருப்பிவிடுகிறது. மக்களின் கவனம் பக்திமனப்பான்மையிலிருந்து, எதைச் சொன்னுலும் வேதவாக்கென்றும், விதியென்றும் நம்பிடும் மனப்பான்மையிலிருந்து, விடுபட்டு சமூகச் சம்பவங்களில், கதைகளில், நாடகங்களில் ஈடுபடுவதால், எத்தர்களின் ஏமாற்று வித்தைகள் தோல்வியுறுகின்றன. விண்ணிலிருந்து மண்ணை நோக்கித் திரும்பும் பார்வை, இம் மண்ணகத்தில் உண்டாக்கப்பட்டுள்ள அநீதிகளைக் கண்டு, அவற்றின் காரணங்களை வினவுகிறது. பக்தி மனப்பான்மையில், கண்மூடியாக மக்கள் இருப்பதால், மதத்தால் சாதியால் உயர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, அரசியல் பதவிக்கு, உயர்ந்தவர்களுக்கும் லாபம் இருக்கிறது. மக்கள் விழிப்பு அடைந்தால், அது பொருளாதார, சமூக, அரசியல் எல்லாவற்றிலும் இருக்கும் அதிகார கூட்டத்தினருக்குத் தொல்லை மூளுகிறது. எனவே சனதனக் கும்பலுடன் அரசியலாரும் சேர்ந்து மக்கள் விழிப்பை அடக்கிட, மலர்ந்து வரும் நாடகக்கலையை அழித்திட முயல்கின்றனர். எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் இருண்ட உள்ளத்திலும், சில ஒளிக்கதிர்களை வீசிடும் வன்மைபெற்று நாடகக்கலை இருப்பதால், அதன்மீது அரசியலாரின் கண்காணிப்பு விழுந்துள்ளது.

வீழ்ந்துவரும் பழமைக்கருத்துக்களை, புராணக் கதைகளை நாடகத்தில் நிலைநிறுத்தமுடியும் என்ற நம்பிக்கை ஆளுங் கூட்டத்தினருக்கு, ஆரிய சிரேஷ்டர்களுக்குப் போய்விட்டது. அதனுல், வளர்ந்துவரும் எதிர்தரப்பு நாடகங்களை அழித்துவிடத் திட்டமிடுகின்றனர்.

நாடகக்கலை மசோதாவை ஆதரித்துச் சட்டசபையில் பேசிய ஒரு உத்தமர் "புராண நாடகத்தை கேலியாக்கி நடிப்பவனை நான் பார்த்தால், கொன்று போட்டுவிடுவேன்" என்று கூச்சலிட்டாராம். உண்மையில் வாதத்தில், கருத்துப்போராட்டத்தில் பலவீனமாகும் ஒருவன் செய்ய நினைப்பது அதுதான்.

எதிர்க்கட்சியினரைக் கொன்றுவிட்டால் எதிர்தரப்பு நாடகங்கள் எதுவுமே நடக்காது, பிறகு தாமும் தமது புராணங்களும் காப்பாற்றப்படும் என்று நினைக்கின்றனர். தன்னுடைய கருத்துக்கு மாறுபட்டவனைக் கொன்றுவிடுவது, இது கடவுள் பேரைச் சொல்லி, காந்தியின் பெயரைச்சொல்லி அரசியல் வாணிபம் நடத்துபவர்களின் கொள்கையாகிவிட்டது.

இப்பொழுது சென்னை மாநில அரசியலார் கொணர்ந்துள்ள மசோதா, நாடகக்கலை மசோதாவல்ல, நாடகக்கொலை மசோதாவாகும்.

✻

கருத்துக் கதிர்

இந்திய ஒற்றுமைக்கு அடிப்படை?

இந்தியத் துணைக்கண்டத்தில் சிதறிக்கிடக்கும் பல்வேறு நாடுகளையும், மாறுபட்டக் கலாசாரங்களையும் ஒன்றுபடுத்த, ஒன்றுபடுத்தி டில்லி ஆதிபத்தியத்தின் ஒருகுடைகீழ் என்றென்றும் நிலைபெறச் செய்ய வடநாட்டு தேசீயத் தலைவர்கள் முயலுகின்றனர். அவர்கள் அடிக்கடி ஒன்றுபட்ட இந்தியா என்று பேசுவதே, பிளவுபட்ட இந்தியா. கலாசார அடிப்படையில் பிரிந்துகிடக்கும் இந்தியாவைக் குறிப்பிடுகிறது. அவர்கள் காணும் ஒற்றுமைக்குப் பலவித காரணங்கள் கூறுகின்றனர். அண்மையில் டில்லி மலையாள சங்கத்தில் பேசிய இந்திய அரசியல் தலைவர், டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் "ராமாயணமும் மகாபாரதமும் இந்திய ஒற்றுமைக்கு அடிப்படையாக இருப்பதாகக்" கூறியுள்ளார். இதுவரை இந்திய ஒற்றுமைக்குப் பூகோளம் வரலாறு, பொருளாதாரம், அரசியல், இந்தவகைகளை எடுத்துக்காட்டிக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது புராண இதிகாசங்களையும் ஆதாரமாகக் காட்டத்தலைப்பட்டுள்ளனர்.

ராமாயணமும் பாரதமும் இந்திய ஒற்றுமைக்கு எப்படி அடிப்படையாக அமையுமென்று நமக்குப் புரியவில்லை.

ராமாயணத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "ராமாயணக்கதை வடநாட்டு ஆரியர்களுக்கும், தென்னாட்டிலிருந்த திராவிடர்களுக்கும் நடைபெற்ற போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்" என்று முதல் மந்திரி நேருவிலிருந்து இந்திய வரலாற்றைப் பற்றி எழுதவரும் வரலாற்றாசிரியர்வரைஒப்புக்கொண்டுள்ளனர். இந்தவகையில் பார்த்தால், திராவிட—ஆரிய கலாசாரமோதுதலில், திராவிடரை இழித்துரைக்கும் எதிர்ப்புணர்ச்சியில் ஆரியரால் கற்பனையால்புனைந்துரைக்கப்பட்ட கதை இராமாயணமாகும். இராமாயணத்தை மீண்டும் வலியுறுத்துவதால், அது எழுதப்பட்டதற்கான வெறுப்புணர்ச்சியை வலியுறுத்துவதாகவே முடியும்.

மகாபாரதமும் இந்திய ஒற்றுமையை எடுத்துக்காட்டும் கதையாக இருப்பதாகத் தெரியவில்லை. இராமாயணக் கதைக்கு வடநாட்டாரியர்க்கும் தென்னாட்டுத் திராவிடர்க்கும் எழுந்த பகைமை அடிப்படையென்றால், பாரதக் கதைக்கு வடநாட்டு ஆரியர்களுக்குள் ஏற்பட்ட உள்சண்டையே அடிப்படையாகும். பாரதக்கதையில் பாரதநாடு என்று ஒன்று கிடையாது. ஐம்பத்தாறு தேசங்கள், அரச குடும்பங்கள், பங்காளிக் குடும்பங்களுக்குள் ஏற்பட்ட சண்டைகள் இவற்றைப் பாரதக் கதை கூறுகிறது. பாரதப்போரில், வடநாட்டு ஆரிய அரசர்கள் அனைவரும் இரு கட்சிகளாகப் பிரிந்து சண்டையிட்டுக்கொண்டனர். பஞ்சபாண்டவர்கள் ஐந்துபேரையும், மற்றும் ஓரிருவரையுந் தவிர்த்து மற்ற எல்லோரும், பூபாரந் தீரும்படி சேனைகள், வீரர்கள் எல்லோரும் மாண்டனர்.

இராமாயணமும் ஒரு சண்டையை அடிப்படையாகக் கொண்டது. பாரதமும் அதைவிட மிகப் பெரிய சண்டையைச் சித்தரிப்பது. இந்தச் சண்டைக்கதைகள், பாரதகண்டத்தில் இருந்த ஆரிய அரசர்களில் சிலர், தமது மனைவியை மாற்றானிடம் சூதாடி அடகுவைத்தோ, அல்லது காட்டில் காணமற்போக்கியோ, பின் திரும்பப்பெற எவ்வாறு சண்டையிட்டுக்கொண்டனர் என்பதைக் காட்டவேண்டுமென்றால், பாரதமும் இராமாயணமும் பயன்படும். இந்திய ஒற்றுமையைவிட, இந்திய வேற்றுமையை விளக்குவதாக அந்த இதிகாச நூல்கள் உள்ளன.

வருந்துகின்றோம்

அறிஞர் அண்ணா அவர்களின் மைத்துனர் தோழர் அரங்கநாதன், உடல்நிலையின்றி இருந்து சென்ற 8-12-54 இரவு இயற்கை யெய்திமை கேட்டு வருந்துகின்றோம்.

அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் அறிஞர். அண்ணா, அவர்களது துணைவியார் திருமதி ராணி அம்மாள் ஆகியவர்களுக்கும் நமது அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பனி வெளியில்

[இரா. செழியன்]

அனாதைச் சிறுவர் இல்லத்து ஆண்டுவிழாவுக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி தங்கமும், சகுந்தலாவும் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தனர். சிறுவர்களுக்குத் துணி மணிகள், தின்பண்டங்கள், விளையாட்டுப் பரிசுகள், வேஷப்போட்டி, நாடகம்;—இப்படி விழாவில் செய்யவேண்டியவை வளர்ந்து கொண்டே போனது. செலவாகும் தொகையும் அதற்குத் தகுந்தாற்போல வளர்ந்து வந்தது.

"ஆண்டுக்கொருமுறையாவது அவர்களுக்கு வேடிக்கை, விழா, நன்றாக இருக்க வேண்டும். மற்ற பையன்களைப் பார்க்கும் பொழுது, இவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு!" என்று சகுந்தலா வாதாடினாள்.

"வேண்டியதுதான். ஆனால் நமக்குக் கிடைக்கும் பணம் குறைவாய் இருக்கும்போலிருக்கிறதே! விழா முடிந்ததும், கடன் பட்டியலைக் காண்பிக்கக்கூடாது. நன்கொடை சேர்ப்பதில் அதிகம் சேர்த்துவிட்டால், எல்லாவற்றையும் சமாளித்துவிடலாம். மணி நான்குதான் ஆகிறது. நான் போய் உடை மாற்றி வருகிறேன். வெளியில் போகலாம்!"

தங்கம் மாடிக்குப் போனாள் சகுந்தலா சுவற்றில் மாட்டப்பட்டிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வாசலில் இருக்கும் மணி அடித்தது. வேலைக்காரன் கதவைத் திறந்துவிட்டான். "தங்கம்! நேற்று பெரியம்மா ஊருக்குப் போனபொழுது..." என்று சொல்லிக்கொண்டு குலசேகரன் உள் நுழைந்தான்.

சகுந்தலா திரும்பிப் பார்த்தாள். தூரத்திலிருந்தபடி தங்கம் என நினைத்துக்கொண்டு வந்த குலசேகரன் வேறு பெண் நிற்பதை அறிந்ததும், மலைத்துவிட்டான், "மன்னிக்கவும்!" என்று தடுமாற்றத்துடன் உட்கார்ந்தான்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. தரையிலிருக்கும் கோடுகளை எண்ணியபடி சகுந்தலா நின்றுகொண்டிருந்தாள். குலசேகரன் பத்திரிக்கையை எடுத்துக் கையில்வைத்திருந்தான். நீண்டநேரம் காத்திருப்பதுபோலத் தோன்றியது.

"டாக்டர் தங்கம் இருக்கிறார்களா?" என்று குலசேகரன் கேட்டான்.

"மேலே சென்றிருக்கிறார்கள்?" என்று சகுந்தலா சொல்லி முடிப்பதற்குள், தங்கம் மாடிப் படிக்கட்டுகளில் இறங்கிக்கொண்டிருந்தாள்.

"நல்லவேளை! உன்னைப் பார்க்கத்தான் நான் கிளம்பிக்கொண்டிருக்கிறேன். நீயே வந்துவிட்டாய்!"

"ஏன், ஏதாவது கொலை, களவு செய்துவிட்டாயா?"

"அதற்குத்தான் நீங்கள் பயன்படுவீர்கள்! நான் வர நினைத்தது, அனாதைச்சிறுவர் இல்லத்து ஆண்டுவிழாவுக்காக! ஓ! மறந்துவிட்டேன்; இதோ! இருப்பவர் சகுந்தலா, அவர்கள்தான் அந்த இல்லத்துத் தலைவி!" பின் குலசேகரனைப்பற்றி சகுந்தலாவிற்குத் தங்கம் அறிமுகப்படுத்தினாள்.

"அந்தச் சிறுவர் இல்லத்தில், ஆண்டுவிழா. நன்கொடை சேர்க்கவேண்டும்! எவ்வளவு ரூபாய் தருகிறாய்? சகுந்தலா! அந்த நன்கொடைச் சீட்டைத் தா!" என்று தங்கம் சொன்னாள். சகுந்தலா தன் பையிலிருந்த ஒரு நன்கொடைப் புத்தகத்தை நீட்டினாள்.

" இது தெரிந்திருந்தால், இங்கு வரவே மாட்டேன். பத்து ரூபாய் தருகிறேன், அதுவும் உனக்காக !''

" இல்லை ! செலவு அதிகமாகிறது. இருபத்தைந்து ரூபாய் !'' தங்கம் சொன்னாள்.

" ஐயோ ! என்னை என்னவென்று நினைத்துக்கொண்டாய் ?'' குலசேகரன் பதினைந்து ரூபாய் போட்டான்.

தங்கமும் சகுந்தலாவும், பின் வெளிக்கிளம்பினார்கள்.

இரவு தங்கம் திரும்பிவரும்பொழுது, கமலநாதன் ஹாலில் உட்கார்ந்திருந்தான்.

" எங்கு இவ்வளவுநேரம் ?'' என்று கமலநாதன் கேட்டான்.

" அனாதைச் சிறுவர் இல்லம் ஆண்டு விழாவுக்கு நன்கொடை வசூலிக்கப் போயிருந்தேன்.''

" எவ்வளவு வந்தது ?''

" இன்று இருநூற்று முப்பத்தைந்து ரூபாய் வந்தது. சரி ! உங்களிடம் இன்னும் கேட்கவில்லையே ! நீங்கள் எவ்வளவு தருகிறீர்கள் ?''

" பத்து ரூபாய் !''

" அவ்வளவுதானா ? சேகரன் பதினைந்து ரூபாய் போட்டான் !

தன்னையும் குலசேகரனையும் ஒப்பிட்டுப் பேசியது, கமலநாதனுக்குப் பிடிக்கவில்லை. "என்னைவிட, அவன் பணக்காரனாயிருக்கலாம் !'' என்று கோபத்துடன் சொன்னான்.

தான் வேடிக்கையாகச் சொன்னதைத் தன் கணவர் ஏன் அவ்வாறு எடுத்துக்கொண்டார் என்று தங்கத்திற்குப் புரியவில்லை.

* * *

கடைசியாகச் சிறுவர்களின் ஆண்டுவிழா வந்தது. அவர்கள் எல்லோரும் புது ஆடைகளை அணிந்து, ஆங்காங்கு சிதறித் திரிந்து கொண்டிருந்தனர், சிலர் வேலை செய்து கொண்டு, சிலர் எதுவும் வேலையில்லாமல் தோரணங்களும், அலங்காரங்களும், தோட்டத்து வாசற்படியிலிருந்து மத்தியிலுள்ள கட்டிடம்வரை செய்யப்பட்டிருந்தன. மரங்களில் வண்ணவிளக்குகள் பரந்து தொங்கிக் கொண்டிருந்தன. ஒலிபெருக்கியில் இசை வந்துகொண்டிருந்தது. சிறுவர்களின் கூச்சல், ஆரவாரம், அந்த இசையுடன் கலந்தன. விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தோர் வரத் தொடங்கினர்.

கமலநாதன் வீட்டைவிட்டுக் கிளம்பிய பொழுது, விழாவுக்கு வந்துவிடுவதற்கு உரிய நேரம் இருந்தது. ஆனால் வரும் வழியில், ஒரு நண்பர் வீட்டுக்குச் சென்றபொழுது அங்கு நித்தியானந்த சாமிகள் இருந்தார். சிறிது காலமாக நித்தியானந்த சாமிகள் காலட்சேபம், பிரசங்கம் ஏதாவது நடைபெற்றால், கமலநாதன் அவற்றைத் தவறுவதில்லை. அவர் பேச்சு இனிமையாகப் பட்டதுடனல்லாமல், சொல்வதில் உள்ள வேதாந்த மேன்மையும் அவனுக்குப் பிடித்திருந்தன. சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு — நித்தியானந்த சாமிகள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு விட்டு கமலநாதன் கிளம்பினான். அவன் செல்லும் வழியே நித்தியானந்த சாமிகளும் செல்லவேண்டியிருந்ததால், அவரையும் தன் காரில் கமலநாதன் அழைத்துச் சென்றான்.

" இன்று அனாதைச் சிறுவர்கள் இல்லத்தில் ஆண்டுவிழா ! அதற்குச் செல்கிறேன்'' என்று கமலநாதன் பணிவுடன் பேச்சைத் துவக்கினான்.

" மெத்த சந்தோஷம் ! மெத்த சந்தோஷம் !'' நித்தியானந்தசாமிகள் தனது உருத்திராட்ச மாலையைத் தடவிக்கொண்டார். " ஆனால் இந்த உலகில் யார் அனாதை ! யார் அனாதையல்ல ? உலகத்தில் எதையும் சதமென்று சொல்வதற்கில்லை. இன்று வரும் நாளைபோம். 'ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, பேருஞ் சதமல்ல, பெற்றோர் சதமல்ல !' என்று பட்டினத்துச் சாமிகள் பாடியதுபோல, எதையும் சதமென்று கொள்ளக்கூடாது. அவர்களை மட்டும் அனாதை என்று பிரித்தல் சரியல்ல. எல்லோரும் அனாதைகள் தான் ! எல்லோரையும் பாதுகாக்கும் பொறுப்பு எம்பெருமான் ஒருவனுக்குத்தான் இருக்கிறது. அவன்தான் எல்லோருக்கும் தாயும், தந்தையும் ! அந்தத் தாயையும் தந்தையையும் மறந்தவன்தான் அனாதை ! இதனால்தான் நமது சமயாச்சாரியார்களெல்லாம் அம்மையும் நீ ! அப்பனும் நீ ! என்று சிவபெருமானைப் போற்றினார்கள். அந்தப் பரம்பொருளின் பாதுகாப்பில் வளரும் குழந்தைகளே நாம் !'' நித்தியானந்த சாமிகள் சொல்வதைக் கமலநாதன் கனிவுடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

" இதுமாதிரி உயர்ந்த கருத்துக்களை நீங்கள் விழாவில் பேசினால் நன்றாயிருக்கும் ! விழாவும் சிறப்படையும் ! நீங்கள் பேச ஒப்புக்கொண்

டால், நான் அங்கு சொல்லுகிறேன். அவர்கள் பெருமையுடன் ஏற்றுக்கொள்வார்கள்'' என்று கமலநாதன் கேட்டுக்கொண்டான்.

நித்தியானந்தசாமிகள் வேதாந்தப் புன்னகை செய்தார். "அவசியமில்லை! எல்லாம் ஆண்டவன் திருவிளையாடல்! அவன் கட்டளையிட்டால், நாம் பேசுகிறோம், இல்லையென்றால் ஊமையாகி நிற்கிறோம்! அவன் சித்தம் எப்படியோ!'' நித்தியானந்தர் மேல் நோக்கால், காரின் உட்புறத்தைப் பார்த்தார்.

அனாதைச் சிறுவர் இல்லம் வந்தது. கமலநாதன் இறங்கி, "இதுதான் நான் குறிப்பிட்ட இடம்! வாருங்கள், விழாவில் கலந்துகொண்டு போகலாம்!'' என்று அழைத்தான். விழாப் பந்தலின் முன் டாக்டர் சஞ்சிவி, தங்கம், சகுந்தலா முதலியோர் நின்றுகொண்டிருந்தனர். கமலநாதன் கார் வந்ததும், தங்கம் சகுந்தலா இருவரும் முன்வந்தனர்.

இறங்குவதற்குத் தயாரான நித்தியானந்த சாமிகள் திடீரென்று உள் அமர்ந்து "இல்லை, நமக்கு அவசரப்பணியொன்றுகாத்துக்கொண்டிருக்கிறது. நாம் செல்லவேண்டியிருக்கிறது, போகிறோம்!'' என்று அவசரப்பட்டு போய்விட்டார். சகுந்தலாவையும், தங்கத்தையும் சுற்றிக்கொண்டு கார் போனது.

"யாரது? காரில், தாடியும் மீசையும்!'' தங்கம் கேட்டாள்.

"நித்தியானந்த சாமிகள்! நன்றாகப் பேசுவார்! வேதாந்த, சித்தாந்தங்களைக் கரைகண்டவர். அவரை இங்கு பேசும்படி கூப்பிட்டேன்! அவர் வேறு வேலையாகப் போய்விட்டார்.''

"நல்லவேளை, நீங்களாவது இங்கு வந்தீர்களே? அவருடன் கூட தாடியும் மீசையும் வைத்துக்கொண்டு போய்விடாமல்!'' கமலநாதன் சிரித்துக்கொண்டு உள் நுழைந்தான்.

* * *

விழா முடிந்தது. விளக்குகள் அணைந்துவிட்டன. ஆரவாரத்துடன் இருந்த சிறுவர்களும் உறங்கிவிட்டனர். நிலவின் மங்கிய வெளிச்சத்தில், கட்டப்பட்டிருந்த கொடிகள் நிழல் போல அசைந்துகொண்டிருந்தன. புயலுக்குப் பின் காணப்படும் அமைதியைப்போல, சத்தமும், சந்தடியும் மிகுந்திருந்த மாலைப் பொழுது கழிந்து, இப்பொழுது தோட்டம் அமைதியாகக் கிடந்தது. மரத்தடியில் தனிமையாக சகுந்தலா உட்கார்ந்திருந்தாள். அதுவரை அவள் ஓய்வின்றி பாடுபட்ட களைப்பில், அன்று மாலை விழா நன்கு நிறைவேறிய தென்ற குதூகலத்தில் அவள் ஆழ்ந்திருந்தாள். ஓட்டப்பந்தயத்தில் முதலாவதாக வந்து சேர்ந்தவன், வெற்றிக்களிப்பையும், களைப்பு நீங்க ஓய்வையும் ஒருங்கே பெருவதுபோல, அவள் பெருமூச்சு விட்டுக்கொண்டாள். இதற்கு முன்பு என்றுமில்லாதவாறு, அவள் உள்ளத்தில் புதிய நம்பிக்கையும், உறுதியும் பிறந்தன.

அந்த அனாதைச் சிறுவர் இல்லத்தை இன்னும் நன்றாகக் கண்காணித்து மேன்மையுறச் செய்யவேண்டும். மற்றவர்களைவிட, நன்றாகப் படிக்கக்கூடிய சிறுவர்கள் பலர் அங்கு இருக்கின்றனர். அவர்களுக்கு ஊக்கம் கொடுத்துப் படிக்கச் செய்தால், அவர்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் முதன்மையாக இருப்பார்கள். படிப்பில் முதற்பரிசுகள் அவர்களுக்குக் கிடைக்கும். பரிசுகள் வழங்கும்பொழுது "இந்தப் பையன் அனாதைச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்தவன்'' என்று சொல்லிக் கொடுப்பார்கள்.

பரிசுகளை வாங்கியதும்,அவற்றைக்கொண்டு வந்து சிறுவர்கள் "அம்மா! இதோ! எனக்குக் கிடைத்தது!'' என்று சகுந்தலாவிடம் கொடுப்பார்கள். தானடையும் பூரிப்பை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அவள் 'இத்துடன் நின்றுவிடக்கூடாது! மேலும், மேலும் பரிசுகள் பெறவேண்டும்!'' என்று சொல்வாள்.

அனாதைச் சிறுவர் இல்லம்! அது பெருமைக்குரிய பெயராகிவிடும். அந்த இல்லத்தைச் சேர்ந்தவன் என்று மாணவர்கள் கூச்சப்படாமல் சொல்லிக்கொள்வார்கள். இப்பொழுது சிறுவர்களாயிருப்பவர்கள் பல துறைகளிலும் முன்னேறிவிடுவார்கள். டாக்டர்கள், என்ஜினியர்கள், ஆசிரியர்கள், பலர் வெளிவருவார்கள். அவர்கள் அந்தக் கட்டிடத்தைத் தாண்டும்பொழுது, "அதோ! அந்த இடத்தில்தான் நான் வளர்ந்தது, படித்தது!'' என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வார்கள். சகுந்தலா வெளியில் எங்கேயாவது போனால் அவளுக்கு அதிகநேரம் ஓய்வு இருக்காது. அவசியமேற்பட்டு போகும்பொழுது "அதோ! போகிறவர், அவர்கள்தான் அனாதைச் சிறுவர் இல்லத்தை நடத்துபவர்கள்'' என்று தமக்குள் பேசிக்கொள்வார்கள்.

காற்று சில்லென்று அடித்தது. தோட்டத்தில் உட்கார்ந்திருக்கிறோம் என்பதைச் சகுந்

தலா உணர்ந்தாள். வீண் கனவுகள்! என்று எழுந்தாள்.

தோட்டத்தின் கதவைத் திறந்துகொண்டு யாரோ ஒருவர் உள்ளே வந்துகொண்டிருந் தார். அவரைப் பார்த்தால் தோட்டக்கார னைத் தோன்றவில்லை. நன்றுகப் போர்த்துக் கொண்டிருந்த அந்த உருவம் மெதுவாக முன்னேறி வந்தது.

"யாரது?" என்று சகுந்தலா கேட்டாள்.

அந்த உருவம் அருகில் வந்தது. சகுந்தலா சற்றுப் பின்னிட்டு நின்றுள். திடீரென்று முக்மூட்டை நீக்கி "நான்தான், சகுந்தலா!" என்று வந்தவர் நின்றுர். முகத்தை நன்றுகப் பார்க்கமுடியவில்லை. ஆனுல் குரல்மட்டும் நன்றுக்க் கேட்டது.

சகுந்தலாவுக்குத் தலை சுழல்வதுபோலிருந் தது. இதுவரைக் குதூகலத்துடன் காணப் பட்ட உலகு, வாழ்வு, விழா, கனவு எல்லாம் இருண்டு மறைந்தன. "ஆ!" என்று கூச்ச லிட்டுக்கொண்டு, பெரும் பீதியுடன் தன் னிடத்துக்கு சகுந்தலா ஓடினுள். கூச்சலைக் கேட்டு தோட்டக்காரன் 'என்னம்மா!' என்று வெளிவந்தான், சகுந்தலா எதையும் பொருட் படுத்தாமல் ஓடிப்போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

சிறிதுநேரங்கழித்து "அம்மா! அம்மா!" என்ற குரல் வந்தது. கூப்பிட்டது தோட்டக் காரன். சகுந்தலா இன்னும் நடுக்கம் தீராமல், மெதுவாகப் பலகணி வழி எட்டிப்பார்த்தாள்.

"யாரோ ஒரு சாமியார்! போய்விட்டார்! மறுபடியும் நாளைக்கு வருவதாகச் சொல்லச் சொன்னுர்!" தோட்டக்காரன் போய்விட்டான்.

"மறுபடியும் நாளைக்கு வருவான்!" சகுந் தலாவின் முகம் பயத்தால் வெளிறிட்டது. முகத்தை மூடிக்கொண்டு படுக்கையில் போய் விழுந்தாள். எல்லாம் குழப்பமடைந்திருந்தது. நிலையான கற்பாறையொன்றில் அடிவைத்த நேரத்தில், அது புரண்டு, அடிகாணமுடியாத பள்ளத்துக்குள் விழச்செய்வதுபோலிருந்தது. இருந்த இடத்திலிருந்து தள்ளப்பட்டு, சேர வேண்டிய இடத்திற்கு இன்னும் போகாத நிலை. அவளைச் சூழ்ந்து, பொருள்கள், உலகம், வாழ்க்கை எல்லாம் வேகமாகப் போய்க்கொண் டிருந்தன.

ஒன்றுமே புரியாத, உணரமுடியாத குழப்பம் உள்ளத்தைச் சூழ்ந்தது. சகுந்தலா எழுந்து உட்கார்ந்தாள். எதிரே இருக்கும் வெள்ளைச் சுவர் மட்டும்தான் அவள் கண்களுக்குத் தெரிந்தன. அதைப் பார்த்தபடி அவள் உட்கார்ந்திருந்தாள். எவ்வளவுநேரம் அவ் வாறு உட்கார்ந்திருந்தாள் என்பது அவளுக் கேத் தெரியாது.

இரவு தனது கரும் போர்வையை அசைத் துக்கொண்டிருந்தது. வானத்தில் நட்சத் திரங்கள் ஒவ்வொன்றுக மறைந்துகொண்டிருந் தன. பால்காரர்கள் மாடுகளை ஓட்டிச்செல்லும் சத்தம் கேட்டது.

திடீரென்று சகுந்தலா எழுந்து நின்றுள். மேஜைக்கு அருகில் போய், ஒரு தாளை எடுத்து, ஏதோ எழுதி, ஒரு உறையுள் போட்டு, மேஜைமேல் வைத்தாள். தனது உடைகளை ஒரு பெட்டிக்குள் போட்டுவிட்டு, தொட்டிலருகில் வந்தாள். குழந்தை அமைதி யாகத் தூங்கிக்கொண்டிருந்தது. அதன் தூக் கம் கலையாமல் அதை எடுத்து அணைத்துக் கொண்டு, மற்றொரு கையில் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, விளக்கை அணைத்துவிட்டு கதவைத் திறந்து வெளிவந்தாள்.

தோட்டத்தின் கதவு மெதுவாகத் திறந்து நின்றது. சகுந்தலா திரும்பிப் பார்த்தாள். கட்டிடம், தோட்டம், முதல்நாள் கட்டப்பட்ட கொடிகள் நிழல்போல ஆடிக்கொண்டிருந் தன.

சகுந்தலா குழந்தையை ஒரு கையால் அணைத்துக்கொண்டு, மற்றொரு கையில் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, நடந்தாள். குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. நீண்ட இருண்ட சாலை முன்னுல் கிடந்தது.

(தொடரும்)

பங்களூரில் 'மன்றம்' புதிய விற்பனையாளர்

ஆர். ராகவன்
பெரியார் நகர்,
பங்களூர்-6.

பிரிட்டிஷ் கயானா

காலப்போக்கில் ஏற்படும் சிறுசிறு வாய்ப்புகளையும் பயன்படுத்தித் தனது ஆதிக்கம் உலகின் பல முனைகளிலும் நிலைபெறச் செய்து, "ஞாயிறு மறையாத பேரரசு" என்ற பெயர் பெற்ற ஆங்கிலப் பேரரசில் அடங்கியுள்ள நாடுகளில் பிரிட்டிஷ் கயானாவும் ஒன்றாகும்.

பிரெஞ்சுக் கயானா, டச்சுக் கயானா ஆகிய நாடுகளை அடுத்தடுத்துக்கொண்டு, தென் அமெரிக்காவின் வட கோடியில் இடம் பெற்றிருக்கும் பிரிட்டிஷ் கயானா, பிரிட்டிஷ் காமன் வெல்த்தின் குடியேற்ற நாடுகளில் ஒன்று. கி. பி. 15-ம் நூற்றாண்டிற்குமுன் கயானா பகுதி அடர்ந்த காடுகளால் மூடப்பெற்று நாகரிகமற்ற செவ்விந்தியர்கள் வாழ்ந்த இடமாக விளங்கிற்று. கி. பி. 1498-ல் கொலம்பஸ் இப்பகுதியைக் கண்டு பிடித்தபின் பல ஐரோப்பிய நாட்டினர் அமெரிக்க நாடுகளில் குடியேறத் தலைப்பட்டனர். தென் அமெரிக்காவில் ஸ்பானியருடைய ஆதிக்கம் இருந்துவந்தது. ஆங்கிலேயர் முதலில் தென் அமெரிக்க நாடுகளுடன் வணிகத்தொடர்புதான் கொண்டிருந்தனர். 1617-ல் சர். வால்டர் ராலே என்பவன் ஆங்கிலேய அரசு கயானாப்பகுதியில் நிலைபெற வேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டு அதற்கான திட்டங்களைத் தீட்டினான். அப்பொழுது அரசாண்ட ஜேம்ஸ் மன்னன் ஸ்பானியர் பகையை விரும்பாது ராலேயின் திட்டத்திற்கு இணங்கவில்லை. இங்கிலாந்து முடிக்கத் தவறிய அத்திட்டத்தை மேற்கொண்டு டச்சுக்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் கயானா நோக்கிக் கலம் விடுத்தனர். 1598-ல் டச்சுக்காரர்கள் தமது ஆதிக்கத்தை கயானாப் பகுதியில் நிலைநாட்டினர். அதையடுத்துப் பிரான்சும் தனக்கொரு இடத்தைப் பிடித்துக்கொண்டது. வட அமெரிக்காவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் குடியேறிய தோட்டப் பண்ணைக்காரர்கள் கயானாவின் செழுமை கேட்டுத் தமது கவனத்தைத் தெற்கே திருப்பினர். டச்சுக்காரர்களிடமிருந்த பகுதிகளில் கொஞ்சங் கொஞ்சமாக குடியேறி 1770-ல் ஆங்கிலேயர் டச்சுக்காரரைவிட அதிகமாகிவிட்டனர். தங்கள் ஆதிக்கம் வேரூன்றிவிட்டது என்று அறிந்தபின 1796-ல் ஆங்கிலேயர் டெமாரரா என்ற பகுதியை டச்சுக்காரரிடமிருந்து கைப்பற்றிக்கொண்டனர். இரு நாடுகளுக்கும் அடிக்கடிபூசல் ஏற்பட்டுக் கடைசியில் 1802-ல் டச்சுக்காரர்கள் தாம் இழந்த பகுதியைப் பெற்றனர். ஆனால் மீண்டும் அடுத்த ஆண்டு 1803-ல் ஆங்கிலேயர் அதைக் கைப்பற்றியபின் 1814-ல் ஆங்கிலேய குடியேற்ற நாடு என்று அறிவிக்கப்பட்டு உரிமையாக்கப்பட்டது. இவ்விதமாகக் கயானாப் பகுதி மூன்று பிரிவுகளாகப்பிரிந்து பிரிட்டிஷ் கயானா, டச்சுக் கயானா, பிரெஞ்சுக் கயானா என்று தனித்தனிக் குடியேற்ற நாடுகளாக மாறின.

காடுகளடர்ந்த கரடு முரடான நிலத்தை அழித்துப் பண்படுத்திக் கழனிகளாக மாற்ற உடல் வலுப்பெற்ற நீக்ரோ மக்களால்தான் முடியும் என்று கண்ட ஐரோப்பியர், ஆப்ரிக்காவிலிருந்து நீக்ரோ மக்களை அழைத்துவந்தனர் அடிமைகள் என்ற முத்திரை பொறித்து. இந்தவகையிலே பிரிட்டிஷ் கயானாவுக்கும் அடிமைகள் கொண்டுவரப்பட்டு அவர்கள் உழைப்பால் கரும்புத்தோட்டங்கள் பல உருவாக்கப்பட்டு, சர்க்கரைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அலுமினிய மூலப் பொருளான பாக்சைட் அதிகமாகக் கிடைத்ததால் அதை எடுத்துப் பிரிக்கும் தொழிற்சாலைகளும் ஏற்பட்டன.

குடியேற்ற நாடுகளில் அடிமைகள் படும் அவதியைக் கண்ட ஆங்கிலேயர் சிலர் அதைத் தடுக்கும்படியான சட்டமியற்றக் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சி வெற்றிபெற்று 1807-ல் ஆங்கிலேயருக்குச் சொந்தமான இடங்களில் அடிமை வாணிபம் ஒழிக்கப்பட்டு, 1838-ல் அடிமை முறையும் ஒழிக்கப்பட்டது.

விடுதலை பெற்ற நீக்ரோவர்கள் தோட்டங்களில் வேலை செய்ய அதிகமான ஆனால் நியாயமான கூலி கேட்டனர். தோட்ட முதலாளிகள் கூலியை உயர்த்த எண்ணங்கொள்ளாது, கூலியாட்கள் கிடைக்க வேறொரு முறையைக் கையாண்டனர். எழுத்து உடன்பாடு (indenture) என்ற முறையின்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கட்டாய வேலைக்கு கையெழுத்து வாங்கிக் கூலியாட்களை அழைத்து

வந்தனர். சீனு, இந்தியா, போர்த்துக்கல் முதலிய நாடுகளில் இந்த முறைக்கு ஆட்கள் கிடைத்தனர். வறுமையுடன் போராடிக் காலங் கழித்துவந்த இந்திய சீன மக்களுக்கு இந்த வாய்ப்பு பெரிதெனப்பட்டது.

முன்பிருந்த அடிமை முறைக்கும் எழுத்து உடன்பாட்டு முறைக்கும் அதிக வேறுபாடு கள் இல்லை. இரும்பு விலங்குகளுக்குப் பதி லாக காகித விலங்குகள் இடம்பெற்றன. உரிமைகளற்ற நடைபிணங்களாகவே இவர் களும் தோட்டங்களில் உழைத்துவந்தனர். *1838*-ல் அடிமை முறை அகன்றதிலிருந்து *1917*-ல் கடைசியாக குடியேறிய கூட்டம்வரை பிரிட்டிஷ் கயானு *4,30,000* பேர்களை இந்தியா, ஆப்ரிக்கா, மடேய்ரா, சீனு ஆகிய நாடுகளி லிருந்து தருவித்திருக்கிறது. பிரிட்டிஷ் கயானுவிலுள்ள மக்கள் தொகை *1911*-ல் *3,09,000*, *1921*-ல் *3,07,000* என்ருல் இந்த இடைக்காலத்தில் அந்த மக்கள் வாழ்வு எப்படி இருந்திருக்கும் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம்.

பிரிட்டிஷ் கயானுவில் இருந்த ஆங்கிலேய முதலாளிகள் அங்கு வாழ்ந்த மற்றநாட்டு மக்களின் நலத்தையும், தேவையையும், நாட்டு முன்னேற்றத்தின் அவசியத்தையும் கவனியா மல் தங்கள் தங்கள் தொழிலுக்கேற்ற திட்டங் களைத் தங்கள் விருப்பப்படி வகுத்துக்கொள் ளும்படியான ஒரு சூழ்நிலையில்தான் அரசாங் கமும் அமைந்திருந்தது. முதலாவது உலக யுத்தம் முடிந்தபோதுதான் பிரிட்டிஷ் கயானு வில் மனித உரிமைகள் பற்றிய கருத்துக்கள் பரவலாயிற்று.

1922-ல் ஆங்கிலப் பேரசிலேயே முதன் முறையாக **பிரிட்டிஷ் கயானு சங்கம்** (The British Guiana Union) என்ற தொழிற் சங்கம் உருவாக்கப்பட்டது. *1931*-ல் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது **பிரிட்டிஷ் கயானு தொழிலாளர் கழகம்** உருப்பெற் றது. *1939*-க்குள் *10* தொழிற்சங்கங்கள் அமைக் கப்பட்டன. *1941*-ல் **பிரிட்டிஷ் கயானு தொழிற்சங்க மன்றம்** ஏற்படுத்தப்பட்டு எல்லாத் தொழிற்சங் கங்களும் அத்துடன் இணைக்கப்பட்டன.

தொழிலாளர்களுக்கு அரசியல் வாழ்வில் இடமில்லாமலே இருந்துவந்தது. *1910*-ல் *3* லட்சம் பேர்களில் *11,000* பேர்களுக்குத்தான் வோட்டுரிமை வழங்கப்பட்டிருந்தது. *1928*-ல் திருத்தப்பட்ட அரசியல் சட்டமும் பயனற்ற தாகவே இருந்தது. இதிலும் தொழிலாளர் களுக்கு வோட்டுரிமை வழங்கப்படவில்லை; கவர்னருக்கே அதிகாரங்கள் அதிகம் தரப்பட் டிருந்தன.

மத்திய வகுப்பினரை அதிகமாகக் கொண்ட **லிபரல் கட்சி** அரசியல்சட்டத்தைச் சீர்திருத்து மாறு கிளர்ச்சி செய்ததையொட்டி *1943*-ல் ஒரு புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட் டது. ஆனுல் உலக யுத்தத்தின் காரணமாக தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டது.

இதே ஆண்டுதான் அமெரிக்கா சென்று டாக்டர் பட்டம் பெற்ற **செட்டி ஜகன்** (Cheddi Jagan) என்பவர் திரும்பி வந்தார். அவர் அமெரிக்காவில் தங்கிய ஏழு ஆண்டுகளில் அரசியலைப்பற்றி நன்கு அறிந்துகொண்டார். முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகளைப்பற்றிக் கட்டுரைகள் வரைந்து, கயானு கிளர்ச்சி இயக் கத்தை வளர்க்க ஆரம்பித்தார்.

தொழிலாளர் முன்னணிகள் வலுப் பெற்று வளரவேண்டிய நேரத்தில் இன

பிரிட்டிஷ் கயானு சில குறிப்புகள்

பிரிட்டிஷ் கயானுவின் எல்லை நாடுகளாக மேற்கே **வெனிசுலா**, தெற்கேயும் தென்மேற்கே யும் **பிரேசில்**. கிழக்கே **டச்சுக் கயானு** ஆகிய மூன்றும் அமைந்துள்ளன.

பிரிட்டிஷ் கயானு மொத்தம் 83,000 சதுர மைல் பரப்புகொண்டது. 100-க்கு 86 பகுதி காடுகளடர்ந்த நிலம். 10 பகுதி புல்வெளி நிலம், மிகுதியான இடத்தில் மக்கள் வாழ்கின் றனர். **பெர்பிஸ், டெமாரரா, எக்கியுபோ** என்ற மூன்று நதிகளும், அதைக்கொண்டு மூன்று பகுதிகளாகப் பிரிட்டிஷ் கயானு அமைந்துள் ளது. **ஜார்ஜ்டவுன்** தலைநகராக இருக்கிறது.

உற்பத்தியாகும் முக்கிய கனிப்பொருள், பாக்சைட், தங்கம், வைரம், மாங்சனீஸ் ஆகிய வையாகும். முக்கிய விளைபொருள் கரும்பு.

1951-ல் பிரிட்டிஷ் கயானுவின் மொத்த ஜனத்தொகை 4,37,019 பேர்களாகும். இதில்

கிழக்கு இந்தியர்	197696	பேர்
ஆப்ரிக்கர்	158940	,,
கலப்பு	46858	,,
அமெரிக்க இந்தியர்கள்	17424	,,
போர்த்துகீசியர்	8712	,,
மற்ற ஐரோப்பியர்	3865	,,
சீனர்	3524	,,

அடிப்படையில் தொழிலாள அமைப்புகள் பணியாற்றிவந்தன. இந்தியர்கள் பிரிட்டிஷ் கயானு வந்து சேர்ந்தபோது அவர்களைவிட ஆப்ரிக்கர்கள் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கினர். படித்தவர்களுக்கு மட்டுமே வோட்டுரிமை இருந்ததால் இந்தியர்களைவிட ஆப்ரிக்கர்களுக்கே அரசியல் வாழ்வில் அதிக செல்வாக்கு இருந்தது. ஆகவே இந்த இரு இனங்களும் ஒன்றையொன்று போட்டியிட்ட வண்ணமே பிரிந்து நின்றன. *1947*-ல் டாக்டர் ஜகன் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, எல்லா முன்னேற்ற சக்திகளையும் ஒன்றுதிரட்டி, இனவழி சேராமல், தொழிலாளர் உயர்வு கருதிப் பாடுபட முயற்சி செய்தார்.

1950-ல் இங்கிலாந்து தொழிற்கட்சி சர்க்கார், பிரிட்டிஷ் கயானுவின் அரசியல் சட்டத்திலுள்ள குறைகளைப்பேர்க்க வாடிங்டன் என்பவர் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது. இக்குழு அமைத்த முறைப்படி வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமைகள் அளிக்கப் பட்டாலும் சட்டங்களை மாற்றக்கூடிய வகையில் கவர்னருக்கு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. *1953* ஏப்ரலில் பொதுத்தேர்தல்கள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

1950-ல் பர்ன்ஹாம் என்பவரைத் தலைவராகவும் டாக்டர் ஜகனின் மனைவியார் ஜேனட் ஜகனை செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மக்கள் முன்னேற்றக் கழகத்தில் (The Peoplee Progressive Party) பங்குகொண்டு டாக்டர் ஜகன் தமது கொள்கைகளைப் பரப்பினர். பொதுவுடைமை (Socialist) சர்க்கார் நிலை பெற நாட்டங்கொண்ட மக்கள் முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. தொழில் வளர்ச்சி, உணவு—நிதி நிலைமை, நிலச்சீர்திருத்தம், கல்வி மாற்றம் ஆகியவை குறித்துத் தங்கள் கொள்கையை விளக்கினர். மக்கள் முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து மற்றும் மூன்று கட்சிகள் போட்டியிட்டன. இக்கட்சிகள் ஒன்றுசேர்ந்து 'முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் கேடு பயக்கக்கூடியதாகும், நாடு நாசமாகிவிடும்' என்று கூக்குரலிட்டனர். மாதாகோயில் பாதிரிகளும் முனனேற்றக் கழகத்தினர் அதிகாரத்திற்கு வந்தால் கோயில்களை இடித்துச் சொத்துகளை பறித்துவிடுவர் என்றும் மக்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கிவிடுவார்கள் என்றும் கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் ஓயாமல் கூறிவந்தனர்.

தேர்தல் அமைதியாக நடைபெற்றது. வயது வந்தவர்கள் எல்லோரும் வோட்டுப் போட்டனர். ஆவலோடு எதிர்பார்த்திருந்த முடிவுகள் வெளிவந்தன. மொத்தம் 24 இடங்களில் முன்னேற்றக் கழகத்தினர் 18 இடங்களில் வாகைசூடி மீண்டனர். ஜூன் மாத மத்தியில் டாக்டர் ஜகனைத் தலைவராகக் கொண்ட மந்திரிசபை பதவி ஏற்று ஆட்சியில் அமர்ந்தது. ஆனல் இந்த ஆட்சி நீண்டநாள் நீடிக்கவிடப்படவில்லை. தாங்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் சில வற்றை நிறைவேற்ற எண்ணும்போது இங்கிலாந்திலிருந்து தடையுத்திரவு பிறந்தது. பிரிட்டிஷ் கயானுவின் அரசியல் சட்டத்தை நிறுத்திவைக்கப்பட்டு மந்திரிசபை கலைக்கப் படவேண்டும் என்று கட்டளை பிறந்தது.

1953-ம் ஆண்டு அக்டோபர் 6-ம் நாள் ஒலி பரப்பி மூலம் ஒரு செய்தி அறிவிக்கப்பட்டது.

"பிரிட்டிஷ் கயானுவில் கம்யூனிஸ்ட் தொடர்பு கொண்டு, சில மந்திரிகள் உள்பட, செய்யும் சதியாலோசனைகள், குடியேற்ற நாட்டின் நலத்திற்கும் ஆட்சிக்கும் ஊறுதேடும் வகையில் அமைவதாகத் தெரிகிறது. இந்த நிலைமை தடுக்கப்படாவிட்டால் உலகின் சில பாகங்களில் ஏற்பட்டதைப்போன்று ஒரு கம்யூனிஸ்ட் நாடாக மாற்ற முயற்சி நடைபெறக்கூடும். இது ரத்தக்களரிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அண்மையில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையைக் கவனிக்கும்போது பிரிட்டிஷ் கயானுவுக்கு கடல், இராணுவப் படைகளை அனுப்பி அமைதியைப் பாதுகாப்பது முக்கியமென அரசாங்கம் கருதுகிறது."

இச்செய்தி வந்த மூன்றுநாள் கழித்து 9-ம் தேதி மற்றொரு செய்தி ஒலிபரப்பப்பட்டது.

" கம்யூனிச ஆட்சி ஏற்பட்டு, நாட்டு அமைதிக்கும் பொருளாதாரப் பிணைப்புக்கும் உண்டாகும் ஒரு ஆபத்தான நெருக்கடியைத் தவிர்க்கும்விதமாகப், பிரிட்டிஷ் அரசாங்கம், பிரிட்டிஷ் கயானுவில் நடைபெற்றுவரும் அரசியல் சட்டத்தை நிறுத்திவைக்க உத்தேசித்துள்ளது."

பிரிட்டிஷ் படைகள் கயானுவில் வந்திறங்கின. மந்திரிசபை கலைக்கப்பட்டுக் கவர்னர் ஆட்சிப் பொறுப்பேற்றார். எல்லாக் கூட்டங்களும் தடைசெய்யப்பட்டன. கழகப் பணிமனைகள் சோதனையிடப்பட்டன. மக்கள் முன்னேற்றக் கழகம் அமைதியான பொதுவேலை நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுத்து, ஒத்துழையாமை யியக்கத்தை ஆரம்பித்து அறப்போர் தொடுத்தது. சர்க்கரைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் தொடங்கினர். அஞ்சல் நிலையத்திலிருந்த சேமிப்புப் பணத்தை மக்கள் பெற்றுக்கொள்ளத் தொடங்கினர். ஆங்கிலப் பொருள்களை வாங்காது சட்டமறுப்பு செய்தனர்.

இங்கிலாந்து பார்லிமெண்டில் லிபரல் கட்சியினர் கேள்விகள் கேட்டனர். தொழிற்கட்சியினர் ஆட்சியாளரின் செயலுக்குத் தக்க காரணங்களை விளக்கக் கோரினர் "சில முக்கிய செய்கைகளிலிருந்து கிடைத்த ஆதாரங்களின்பேரிலேயே இந்த ஆபத்து அறியப்பட்டது." என்று தெரிவிக்கப்பட்டு, கயானா பற்றிய குறிப்புகள் வெளியிடப்பட்டு அதன்பேரில் விவாதமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. டாக்டர் ஜகனும், மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் பர்ன்ஹாமும் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டனர்.

டாக்டர் ஜகனும், பர்ன்ஹாமும் இங்கிலாந்து வந்துசேர்ந்தனர். அக்டோபர் 20-ம் மக்கள் சபையில் கயானா விவாதம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் கயானாத் தலைவர்கள் மீதிருந்த குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தன. அவைகளில் முக்கியமானவை.

1. அரசியல் முடிவைக் கான வேலைநிறுத்தங்களைத் தூண்டினர்.
2. தொழிற்சங்கங்களை சட்டபூர்வமாகக் கலைக்க முயற்சித்தனர்.
3. கிழக்கிந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கினர்.
4. விரும்பத்தகாத நூல்களை நாட்டில் உலவவிடாது தடுக்கும் முறைகளைச், சட்டம்மூலம் நீக்கிக் கம்யூனிசப்பிரசுரங்களை வரவழைத்தனர்.
5. இனப் பாகுபாட்டை வளர்த்தனர்.
6. அரசியல் நோக்கத்தோடு மாதாகோயில் பள்ளிகளையும் பாடபுத்தகங்களையும் மாற்ற முயன்றனர்.
7. ஆட்சி செய்யும் கடமையைப் புறக்கணித்தனர்.
8. கவர்னரின் போலீஸ் படையை மதியாது மக்களின் போலீஸ் படையை அமைக்கப் போவதாக அறிவித்தனர்.
9. பலாத்காரத்தைத் தூண்டினர்.

டாக்டர் ஜகனைத் தொழிற்கட்சித் தலைவர்கள் சந்தித்தபோது மேற்கூறிய குற்றச்சாட்டுகளை மறுத்தார். தங்கள் கழகம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்ததல்லவென்றும், இங்கிலாந்து தொழிற்கட்சியைப் போன்றதொரு கழகமேயாகும் என்றும் தெரிவித்தார். மக்கள் சபையில் வீற்றிருந்த தொழிற் கட்சியினர் அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டுவந்தனர். "கயானாவில் உள்ள சூழ்நிலை அரசியல் சட்டத்தை நிறுத்திவைக்க வேண்டிய அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை" என்று வாதாடினார்கள்.

குடியேற்ற நாடுகளின் செயலாளரான ஆலிவர் லிட்டெல்டன் அரசாங்கத்தின் நடவடிக்கை நன்கு ஆராய்ந்து செய்யப்பட்டதேயாகும் என்று நீண்டதொரு வாதம் புரிந்தார். முடிவாகத் தொழிற்கட்சியினரின் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு, 38 வோட்டுகள் அதிகமாகப் பெற்று அரசாங்கம் வெற்றியடைந்தது.

டாக்டர் ஜகன் எதிர்பார்த்தபடி எவரிடமிருந்தும் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. லிபரல் கட்சியும் தொழிற்கட்சியும் அரசாங்கத்தின் நடவடிக்கை அளவுக்கும் மீறியது என்று கூறியதே தவிர அடாதது என்று வாதிடவில்லை. எல்லோரும் டாக்டர் ஜகனை கம்யூனிஸ்ட் என்றோ கம்யூனிஸ்டுகளால் ஏமாற்றப்பட்டவர் என்றோ கூறாமல் இல்லை.

டாக்டர் ஜகன் இந்தியப் பார்லிமெண்டில் பேச அனுமதி கேட்டார். அது மறுக்கப்பட்டதென்றாலும் அவரது கருத்தை இந்தியர்களிடம் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கலாம் என்று அறிவித்து அழைப்பு விடுத்தது. அதன்பேரில் டாக்டர் ஜகன் சென்ற ஆண்டு நவம்பர் திங்களில் பதினைந்து நாட்கள்வரை இந்தியாவில் தங்கிப் பல இடங்களில் தனது கருத்தை வெளியிட்டு ஆங்கிலேயர் இழைக்கும் கொடுமையைத் தெரிவித்தார்.

தற்போது ஜகன் கயானாவில் அரசியலாரின் கண்காணிப்பில் இருக்கிறார். டாக்டர் ஜகன் இளவயதிலேயே ஒரு பெரிய கிளர்ச்சிக்குத் தலைவனாகி, நாட்டில் உலவிய பல்வேறு சக்திகளையும் பிணைத்து உரிமைப்போர் கிளப்பிய சிறந்த அரசியல்வாதியாகும். டாக்டர் ஜகன் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல என்பதை நிரூபிக்க கடைசிவரை பிரிட்டிஷ் கயானாவில் நிலவிய அமைதியே போதிய சான்றாகும். அறப்போரில் இன்னும் நம்பிக்கையிழக்காதிருப்பவர் டாக்டர் ஜகன்.

கம்யூனிசக் கொள்கைகள் ஒரு குறிப்பிட்ட இனத்தாரின், குறிப்பிட்ட நாட்டின் ஏகபோக சொத்தல்ல. எங்கே வறுமையில் வாடிடும் மக்களும் அவர்களை உருவாக்கும் உல்லாசபுரியினரும் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் புரட்சிக்கருத்துக்கள் மலரத்தான் செய்யும். இதைக்கொண்டே ஒரு நாடு கம்யூனிஸ்டுகளோடு தொடர்புகொண்டிருக்கிறது என்ற முடிவு காண்பது தவறாகும்.

குடும்ப நல் வாழ்வு

[இரா. நெடுஞ்செழியன்]

ஒவ்வொரு குடும்பமும் நாட்டின் ஒவ்வொரு சிறந்த உறுப்பாகும். குடும்பங்கள் வளமாக இருந்தால் நாடும் வளமாக இருக்கும்; குடும்பங்களிலே இன்பம் பொங்கினால் நாட்டிலும் இன்பம் பொங்கும்; குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தால் நாட்டின் வாழ்க்கைத் தரமும் உயரும். 'சிறு துளிகள் பெருவெள்ளம்' என்பதைப்போன்று குடும்பங்களின் நிலைமைகளெல்லாம் சேர்ந்துதான் நாட்டின் நிலைமையை உருவாக்குகின்றன. பெரும்பாலான வீடுகளில் வாட்டமும் வேதனையும் மட்டுமே குடிகொண்டிருக்குமேயானால், அவற்றின் சாயலைத்தான் நாட்டின் பொதுத்தன்மையிலும் காணமுடியும். குடும்பங்கள் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல அமைதியான—அழுத்தமான—நிலையான — உயர்வான — மகிழ்ச்சிகரமான அடிப்படையில் நிலைநாட்டப்பட்டிருக்கின்றனவோ, அதைப் பொறுத்துத்தான் நாட்டின் பொதுத்தன்மையில் நல்ல உயர்வையும், சிறப்பையும், இன்பத்தையும் காண இயலும். வீடுகள் விரிந்து பரந்து நின்றால், நாடும் விரிந்து பரந்து நிற்கும். வீடு தன்னைத்தானே பாதுகாத்துக்கொண்டால், நாடும் தன்னைத் தானே பாதுகாத்துக்கொண்டதாகப்பொருள். நாட்டிற்கு அடிப்படை வீடு எனில் அது மிகையாகாது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒவ்வொரு சொந்தமான வீடு இருக்கவேண்டும். ஒரு சிலர்க்கு மட்டுமேதான் சொந்த வீடு, பலர்க்கு வாடகை வீடுதான் என்ற நிலை இருக்குமேயானால், வேதனை மிக வழி ஏற்படுமேயல்லாமல், வாழ்வின்பம் ஏற்பட வழி பிறக்காது. ஒரு நாடு வாடகை வீடுகளைத்தான் மிகவாகக் கொண்டிருக்கிறது என்ற நிலை அடியோடு மாறவேண்டும். எல்லாக் குடும்பங்களுக்கும் உரிமையுள்ள சொந்த வீடுகள் உண்டு என்ற நிலைமை ஏற்பட, என்னென்ன செயல்கள் செய்யப்படவேண்டுமோ, அந்தந்தச் செயல்கள் உடனடியாகச் செய்யப்படவேண்டும். அதுபோலவே எவன் நிலத்தை உழுகிறானோ, அவன் அந்த நிலத்துக்குச் சொந்தக்காரனாக இருக்கவேண்டும். ஒரு குடும்பத்திற்குச் சொந்தமான ஒருகுறிப்பிட்ட—போதுமான—குறைந்த அளவு நிலத்தையும், ஒரு குறிப்பிட்ட மதிப்புள்ள அல்லது அளவுள்ள வீட்டையும் யாரும் பறிமுதல் செய்யவோ அல்லது கடனுக்கு ஈடாக எடுத்துக்கொள்ளவோ முடியாது என்ற சட்டம், அரசினரால் நிறைவேற்றப்படவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தையும் வீட்டையும் கடனுக்கு ஈடாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்றால், கடன்கொடுத்தவர்கள் தொகையை இழக்க வேண்டிவருமே என்று சிலர் எண்ணக்கூடும். இப்பொழுது கடன் கொடுக்கமுடியாத ஏதும் அற்றவர்கள், கடனுக்காகவேண்டி சிறைச்சாலைக்கு அனுப்பப்படும்போது, கடன் கொடுத்தவர்கள் என்ன பலனை அடைகிறார்களோ, அதே பலனைத்தான் குறிப்பிட்ட அளவு நிலத்தையும்—வீட்டையும் ஒதுக்கும்போதும் அடையவேண்டி நேரிடும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் குறிப்பிட்ட மதிப்புள்ள வீட்டை எப்பொழுதும் சட்டத்தின் மூலம் சொந்தமாக்கித் தருவதன்மூலம், குடும்பத் தொல்லைகள் பெரும் அளவுக்குப் போக்கப்படுவனவாகின்றன. இத்தகைய சட்டம் ஏழை எளிய பாட்டாளி மக்களுக்குப் பெரும் நன்மை புரிவதாகும். ஒவ்வொரு குடும்பமும் வாழ்வதற்கேற்ற சொந்தமான வீட்டைக்கொண்டிருக்கும் நிலையை ஏற்படுத்தித்தரவேண்டியது அரசின் இன்றியமையாத கடமையாகும். ஒவ்வொருவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க வீடும் போதுமான அளவு இருக்கின்றனவா என்று பார்ப்பதுதான் நல்ல அரசின் சிறந்த பண்பாகும்.

குடும்ப வாழ்வு நலமுற நாம் முக்கியமான ஒரு பொருளைப்பற்றி மிக்க அக்கறை செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் வாழும் காலத்திலுள்ள அன்புள்ளமும், அறிவுள்ளமும் அப்பொருளைக் குறித்து, ஏற்றத்திற்கான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான், எதிர்காலம் இன்பமாக அமையும். அது

தான் பெண்ணடிமை போக்குவது பற்றிய தாகும்.

பன்னெடுங் காலமாகப், பல்வேறு நாடுகளிலும் பெரும்பாலான ஆடவர்கள் அடிமைகளாகவே வாழ்ந்துவந்தனர் என்பதை வரலாறு கூற நாம் அறிகிறோம். அத்தகைய காலங்களிலெல்லாம் பெண்கள் அடிமைகளுக்கு அடிமைகளாகத்தான் வாழ்ந்துவந்திருக்கிறார்கள் என்பதையும் அறிகிறோம். மனித சமுதாயம் பொதுவாக நன்னிலை எய்த வேண்டுமானால் பெண்குலம்—தாய்க்குலம் முதலில் விடுதலையடைந்தாகவேண்டும். மனித உயிர்கள் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களிலெல்லாம், மிகச் சிறந்ததும் உயர்ந்ததும், மிகத் தூய்மையானதாகக் காப்பாற்றப்பட வேண்டியதும் வாழ்க்கை ஒப்பந்தமேயாகும் என்று ஐயமறக் கூறலாம். கூட்டுறவு அமைப்புகளிலெல்லாம் மிகச்சிறந்த கூட்டுறவு அமைப்பு திருமணமேயாகும். திருமணத்திற்காக மேற்கொள்ளப்படும் சடங்கு உள்ளபடியே உண்மையான திருமணம் ஆகாது. எப்படிப்பட்ட முறையில்—எப்படிப்பட்ட சடங்குகளோடு திருமணம் செய்துகொண்டார்கள் மணமக்கள் என்பதல்ல முக்கியம்; எப்படிப்பட்ட—ஒன்றையொன்று ஈர்க்கும்—கனிந்த உள்ளங்களோடு திருமணம் செய்துகொண்டார்கள் என்பதுதான் மிக முக்கியம். உள்ளத்தோடு உள்ளம் அன்பால் பிணைக்கப்படாது நிகழும் திருமணம் உண்மையானத் திருமணம் ஆகாது. திருமண நிகழ்ச்சி என்பது ஊரறிய உலகறிய அறிமுகம் செய்துகொள்ளும் பொதுப்படையான விழாவாகும். அந்த விழா மணமக்கள் வாழ்க்கைத்துணைவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதைப் பதிவு செய்துகொள்ளும்; திருமண விழாவில் கலந்துகொள்ளும் உற்றாரும் உறவினரும், ஊராரும் பிறரும் அதற்குக் கரியாக (சாட்சியாக) இருப்பர். அதைத்தவிர திருமணம் உலகத்துக்குச் செப்பும் முக்கியமான செய்தி என்னவென்றால், மணம் செய்துகொள்ளும் மணமக்கள் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள் என்பதாகும்.

மணவிலக்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். மணமக்கள் இயற்கைக்கு மீறிய ஆற்றலாகிய ஆண்டவனால்தான் ஒன்றுசேர்த்து வைக்கப்படுகிறார்கள் என்று கோடிக்கணக்கான மக்கள் கற்பனை செய்துகொள்ளுகிறார்கள். மணமக்கள் ஆண்டவனால் பிணைக்கப்படும் காரணத்தால், அவர்கள் சாகும் காலம் வரையிலும், இருவரும் ஒருவரையொருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் மணமக்களாகவே வாழவேண்டும் என்று வைதீக மக்கள் கருதுகின்றனர். மணம் செய்துகொண்டவர்கள் எல்லோரும் ஆண்டவன் அருளின்பேரில் தான் ஒன்றாகப் பிணைக்கப்படுகிறார்கள் என்பது உண்மையாயின், அந்த ஆண்டவன் பேரறிவு பேராற்றல் படைத்தவர் அல்லர் என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கும்.

நன்கு ஊன்றிப் பார்த்தால், திருமணம் என்பது ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் என்பது தெளிவாகப்படும். வாழ்க்கை ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட இருசாராரும் சிலபல நெறிமுறைகளைக் காப்பாற்றவேண்டியவர்களாகிறார்கள். சமூக நலன்கள் பாதிக்கப்படாதவரையிலும், சமூக வாழ்வுக்கு இழுக்கு ஏற்படாதவரையிலும், மணமக்கள் ஒருவரையொருவர் விரும்பாத நிலையிலும் மணவிலக்கை வேண்டாத வரையிலும் மணவிலக்கு வற்புறுத்தப்பட வேண்டிய இன்றியமையாமையில்லை. மனைவியானவள் தொடர்ந்தும், பிடிவாதமாகவும் வாழ்க்கையொப்பந்த விதிகளை மீறி நடப்பாளேயானால், அதனைக் காரணங்காட்டிக் கணவன் மணவிலக்கை விரும்புவானேயானால், அப்பொழுது விலக்குக்கு அனுமதி அளிக்கப்படத்தான் வேண்டும். மனைவியானவள் கணவனது போக்கு பிடிக்காமல் மணவிலக்கைக் கேட்பாளேயானால்—மணவிலக்கை விரும்புவாளேயானால் அந்த அளவிலேயே அவள் மணவிலக்குச் செய்துகொள்ளுவதற்கான அனுமதியை அவளுக்கு அளித்துவிடத்தான் வேண்டும். உள்ளத்தால் — அன்பால்—காதலால் பிணைக்கப்படாத இருவரை, கணவன் மனைவி என்ற பேரால் வற்புறுத்திப் பிணைப்பது அவர்கள் வாழ்க்கையில் வேதனையையும் தொல்லையையும் வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், அது சமூகத்தின் வளர்ச்சியையும் தாக்குவதாக அமைந்துவிடும். விரும்பிய உள்ளங்கள் நீங்கா அன்பினால் சேர்ந்து வாழ்வதற்கான வழிவகைகளையும், சூழ்நிலைகளையும் சமுதாயம் நல்ல முறையில் ஏற்படுத்தித்தரவேண்டும்.

மனைவி விரும்புவாளேயானால், அவளுக்கு மணவிலக்குரிமை அளிப்பது அவளுக்கு மட்டுமல்லாமல், அவள் சார்ந்திருக்கும் சமுதாயத்துக்கும் நன்மை பயப்பதாகும். குழந்தைகளெல்லாம் காதலன்பால் பெற்றெடுக்கப்படும் குழந்தைகளாக இருக்கவேண்டும். பெற்றெடுக்கப்படும் குழந்தைகளெல்லாம் விருப்பத்தோடும் நேர்மையோடும் வரவேற்கப்படுவனவாக இருக்கவேண்டும். தாய்தந்தையரின்

கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, அவர்களை வெறுக்கவும், ஒதுக்கவும், அருவருக்கவும் ஆன நிலைக்குத் தள்ளப்பட்ட குழந்தைகள், பிற்காலத்தில் உலகில் ஒழுக்கக்கேட்டையும் குற்றத்தையும் நிரப்புபவர்களாகத்தான் மாறுவார்கள். மனைவியை எப்பொழுதும் வெறுத்தொதுக்கிக்கொண்டிருக்கும் கணவனோடு, அவள் சேர்ந்துதான் வாழவேண்டும் என்ற நிலைமையை ஒரு நாட்டின் சட்டமோ அல்லது அந்த நாட்டு மக்களின் பொதுவான தீர்ப்போ வற்புறுத்தி ஏற்படுத்தக்கூடாது. மணவிலக்கு சமுதாய ஒழுக்கத்தின் சீர்குலைவைக் காட்டுகிறது என்று யாரும் எண்ணிடவேண்டியதில்லை. மணவிலக்கு சமுதாய ஒழுக்கச் சீர்குலைவின் அறிகுறிதான் என்று ஒருசிலர் கொள்வார்களேயானாலும், அதனால் உலகம் ஒன்றும் கெட்டுப்போய்விடாது. ஒருவரையொருவர் விரும்பாமல் வேண்டாவெறுப்போடு மணவாழ்க்கை நடத்துபவர்களால் ஏற்படும் கெடுதல்களைவிட, மணவிலக்குச் செய்துகொண்டு வாழ்பவர்களால் ஏற்படும் கெடுதல்கள் மிகமிகக் குறைவுதான். மணவிலக்குச் செய்துகொள்வதன் மூலம், ஆண் பெண் உள்ளங்களில் அரும்பக்கூடிய காதல் அடியோடு அழிந்துபோய்விடும் என்று யாரும் அஞ்சிடவேண்டியதில்லை. வேறு நல்ல நிலையான மறுமணத்தை விரும்புகிற அளவுக்குக் காதல் உள்ளம் அவர்களிடத்தில் இருக்கவே செய்யும். மனித சமுதாயம் வாழுங் காலம் மட்டும் ஆடவரும் பெண்டிரும் ஒருவரையொருவர் காதலிக்கவே செய்வர்; ஆணும் பெண்ணும் இருக்கும் மட்டும் காதல் இருக்கவேசெய்யும். அதுவரையில் உண்மையான—உயர்வான—சீரான—சிறப்பான—புகழுதற்குரிய—போற்றுதலுக்குரிய திருமணத்திற்கான வழியும் இருக்கவேசெய்யும். பெண்ணடிமை சமுதாய வாழ்வினின்றும் அறவே அகற்றப்படவேண்டும். பெண்ணடிமை தீரும் மட்டும் மனித சமுதாயம் வளர்ச்சியுற்றதாகவேகருதமுடியாது. அடிமைத்தனத்தைச், சமுதாயம் வளர்வதற்கான வளமுள்ள நிலமாகவோ, வாழ்வுதரும் நீராகவோ ஒருகாலும் கொள்ளமுடியாது.

மணவிலக்கு அளிப்பதில் ஆணையும் பெண்ணையும் ஒரேமாதிரியாக எண்ணி உரிமை அளிப்பதற்கில்லை. ஆணுக்கு விலக்குரிமையளிப்பதிலும், பெண்ணுக்கு மணவிலக்குரிமையளிப்பதிலும் ஒரு சிறிது வேறுபாட்டினை உறுதியாகக் கடைப்பிடிக்கவே வேண்டியிருக்கிறது. பெண் தன் இளமையையும் அழகையும் சீர்வரிசையாக ஆணிடம் ஒப்படைத்து மணம்புரிந்துகொள்கிறாள். பெண் வயதேறித் தோல் சுருங்கி, அழகற்றவளாக ஆகிவிட்டாள் என்பதற்காக அவளை விலக்க ஆண் முயன்றால், அத்தகைய மணவிலக்குக்கு இடமளிக்கக்கூடாது. இல்லையானால் அவள் ஆதரவற்ற அனாதையாகிவிடுவாள். பெண்ணின் அழகுச்செல்வம் அழிந்து, வாழ்க்கை வளங்கள் குறைந்துபோகும் நிலையில், ஆண் அவளை மணம்புரிந்துகொண்ட காலத்தில் கொண்டிருந்த காதல்வேட்கையுணர்வைவிட மிகுவான வேட்கையுணர்வையுடையவனாக இருக்கவும்கூடும். ஆனால் மனித உணர்வை அவன் மறந்துவிடக்கூடாது. பொதுவான இயற்கை விதிப்படி பார்த்தால், ஆண் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் திறம் படைத்தவன்; பெண் இயற்கை விதிப்படி உதவிபெறவேண்டிய நிலையிலிருப்பவள். பெண் பிடிவாதமாகவும், கொடுமையாகவும் வாழ்க்கை ஒப்பந்த விதிகளை மீறினால் அல்லாது, ஆண் அவளை மணவிலக்குச் செய்வதற்கான உரிமை அளிக்கப்படக்கூடாது. ஆனால் பெண் மணவிலக்கு விரும்புவாளேயானால், அவள் விரும்பின அளவிலேயே மணவிலக்குரிமை அளிக்கப்படலாம். சமுதாயத்தின் நல்வாழ்வைக் கருதியும், குழந்தைகளின் நல்வாழ்வைக் கருதியும் அவளுக்கு, அவள் விரும்புவாளேயானால், மணவிலக்குரிமை அளிக்கப்படத்தான் வேண்டும்.

விடுதலை வாழ்வுபெற்ற பெண்களின்—விடுதலை வாழ்வு பெற்ற தாய்மார்களின் தலைமுறை தோன்றாத வரையில், பெரிய மனிதர்களின் தலைமுறை ஒருநாளும் தோன்றவே செய்யாது. விடுதலை வாழ்வுகொண்ட தாய்மார்கள்தாம் விடுதலை வீரர்களைப் பெற்றெடுத்து வளர்க்க முடியும்.

மொழியில் மிகவும் நேர்த்தியான—மிருதுவான—கனிந்த சொல் 'தாய்மை' என்ற சொல்லாகும். அந்தச் சொல்லில் கழிபேருவகையும் கடுந்துயரும், தனிப்பேரன்பும் தன்னலத்துறவும் வியக்கத்தக்க வகையில் குழைந்து காணப்படுகின்றன. அந்தத் தாய்மைப் பண்பைத் தூய்மையானதாகப் போற்றிக் காப்பாற்ற வேண்டியது மனித சமுதாயத்தின் இன்றியமையாக் கடமையாகும்!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

அண்டசராசரம் - 12

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத. புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடிநரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள், அதையடுத்து ஆடகேசுரபுவனம். அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும், வீரசுவர்க்கமும். காந்தருவர் வித்தியாதரர்களும், கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம். சந்திரலோகத்துக்கு மேல்நோக்கி. அடுத்தடுத்து முறையே, நட்சத்திரமண்டலம், செவ்வாய் மண்டலம், புதன் மண்டலம். பிரகஸ்பதி மண்டலம், சுக்கிரமண்டலம், சனிமண்டலம் முதலியன இருக்கின்றன. சனிமண்டலத்தில், சனிபகவானைத் தவிர, இராகு கேதுக்கள் இருக்கின்றன. அதற்கு மேலுள்ள சப்தரிஷி மண்டலத்தில், அத்திரி, வசிட்டர் முதலான ஏழு ரிஷிசிரேஷ்டர்கள் இருக்கின்றனர். சப்தரிஷி மண்டலத்திற்குமேல் சிஞ்சுமாரம் என்ற காலச்சக்கிரம் இருக்கிறது. அதற்குமேல் இந்திரலோகம் இருக்கிறது......]

" சயந்தி அழகானவள். பருவமங்கை. அவளை அனுப்பினால் சுக்கிரனின் தவத்தைக் கெடுத்துவிடலாம்," பதவியை எப்படிக் காப்பாற்றுவது என்ற கவலையுடனிருக்கும் இந்திரன் நினைத்தான்.

" சே! சொந்த மகள், அவளையா ஈனத் தொழிலுக்கு அனுப்பிப்,பதவியைக்காப்பாற்ற முயல்வது?" சயந்தியின் தந்தை இந்திரன் எண்ணினான்.

" மேனகை, திலோத்தமை முதலியவர்கள் தோற்றுவிட்டார்கள். இப்பொழுது சயந்தி ஒருத்திதான் இருக்கிறாள். சுக்கிரனுடைய தவம் முறிக்கப்படாவிட்டால், இந்திர பதவி மட்டுமல்ல, தேவலோகமே கைமாறிவிடும்!"

" மேனகை, திலோத்தமை கண்டவரை மயக்கிடும் கணிகையர்கள் — தெய்வலோகத் தாசிகள். அவர்களுடன் சேர்த்துதான் சயந்தியைக் கணக்கிடுவதா? இளவரசி, சூது வாது தெரியாதவள்! குற்றமற்ற அந்த கோமளத்தை எதிரியை மயக்கி வசப்படுத்தும் இழிதொழிலுக்கு அனுப்புவதா?"

" சயந்தியை அனுப்பினால் தப்பினாய்! இல்லையேல், சுக்கிரனுடைய தவம் வெற்றி பெறும். அசுரர் பலம் பெருகும். தேவர்கள் அடிமைப்படுவார்கள். இந்திரலோகத்தில் அசுரர் மன்னன் கோலோச்சுவான்! ஆக, நேரத்தை வீண் செய்யாதே! சுக்கிரனின் தவம் முடியும் நேரம்! சீக்கிரம் அனுப்பு சயந்தியை!"

" ஐயோ! சயந்தி என் மகள்!"

" தந்தையென்றும் மகளென்றும் பார்க்க இது நேரம் அல்ல! சயந்தியை அனுப்பினால், தேவர்கள் தப்பிக்கலாம், உன் பதவி காப்பாற்றப்படும்! கூப்பிடு அவளை! சுக்கிரன் தவஞ் செய்யுமிடம் அனுப்பிவை!"

இந்திரனுடைய உள்ளத்தில், பதவி மோகமும், தந்தையின் பாசமும் போராடின. கடைசியில் பதவிமோகம் வென்றது. சுக்கிரனின் தவத்தைக் கெடுக்கும் செயலுக்குத் தன் சொந்த மகளை அனுப்பிட தேவர் தலைவன் இந்திரன் முடிவு செய்தான்.

" சயந்தி! சயந்தி!"

சயந்தி ஓடிவந்து நின்றாள்.

அவளைப் பார்த்ததும், இந்திரனால் ஏதும் சொல்லமுடியவில்லை. சிறிதுநேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

"ஏனப்பா! என்னைக் கூப்பிட்டுவிட்டுக் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறீர்கள்?"

இந்திரன் தன் மனத்தைத் திடம்செய்து கொண்டான். "சயந்தி! உன் திருமணத்தைப்பற்றிதான் எனக்குக் கவலையாயிருக்கிறது?"

சயந்திக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. அவளுடைய அழகுக்கு—இளவரசி நிலைமைக்கு தேவகுமாரர்கள் பலர் காத்துக்கொண்டிருந்தனர். "அதற்கென்ன இப்பொழுது அவசரம்? காலம் கூடுகிறபொழுது, திருமணம் நடைபெற்றுவிடும்."

"இப்பொழுது அந்த நேரம் வந்துவிட்டது. உனக்கு ஒரு மணாளனையும் நான் தேர்ந்தெடுத்துவிட்டேன்."

சயந்தி நாணத்தால் தலை கவிழ்ந்து நின்றாள், தனக்கு வரப்போகும் மணாளன் யாரோவென்று அவள் நினைத்தாள்.

"சுக்கிராச்சாரியார்!" இந்திரன் வேறுபக்கம் பார்த்தபடி சொன்னான்.

"போதுமப்பா, வேடிக்கை!" சயந்தி சிரித்தாள்.

"வேடிக்கையல்ல, உண்மையாகத்தான்."

சயந்தியால் நம்பமுடியவில்லை! சுக்கிராச்சாரியார் தங்கள் குலத்துக்கே எதிரி, எதிரிகளான அசுரர்களுக்கு குரு! அவருக்குத் தன்னைக் கொடுக்க, தந்தை எப்படி முடிவுசெய்தார் என்று புரியவில்லை. மேலும் எதிரியின் மகளை மனைவியாக்க அந்த சுக்கிராச்சாரியார் ஏன் முன்வந்தார்? சுக்கிராச்சாரியார்! பெயரே கசந்தது. ஒரு முறை சயந்தி அவரைப் பார்த்திருக்கிறாள். ஒற்றைக் கண்ணுடன், பரட்டைத்தலையுடன், காட்சியளித்த கோரவுருவம்!

"அவர் நம் தேவர் குலத்துக்கே எதிரி! ஒற்றைக்கண், ஒடிந்த உருவம். அவருக்கா என்னைக்கொடுக்க நிச்சயித்தீர்கள்?"

"அந்த ஒற்றைக்கண் பார்வையின்கீழ்தான், நமது தேவலோகத்தின் கதியே ஊசலாடிக்கொண்டிருக்கிறது. அவர் செய்யும் தவம் வெற்றிபெற்றால்..." இந்திரனின் குரல் நடுங்கியது.

"தவம் செய்யும் அவருக்கு மனைவி எதற்கு? பணிவிடை செய்ய ஒரு சீடன் இருந்தால் போதுமே!"

சயந்தியை சுக்கிராச்சாரியாரிடம் எப்படி அனுப்புவது என்று யோசித்துக்கொண்டிருந்த இந்திரனுக்கு நல்ல வழி கிடைத்தது. "நல்ல யோசனையைச் சொன்னாய்! நேரடியாகப் போனால் அவனை மடக்க முடியாது! சீடனைப்போல வேடமிட்டுப், பணிவிடை செய்துகொண்டிரு! பின் மனைவியாகிவிடலாம்! அவனுடைய தவம் கெடும்!" இந்திரன் தன்னையும் மறந்து உணர்ச்சியுடன் பேசிவிட்டான்.

சயந்திக்கு விபரீதம் புரிந்தது. சுக்கிராச்சாரியாரின் தவத்தைக் கெடுப்பதற்குத் தன்னை அனுப்ப தந்தை திட்டமிடுகிறார்! ஊர்வசி, செய்கிற வேலைக்கு—செய்கிற தொழிலுக்கு... நினைக்கவே சயந்திக்கு உள்ளம் நடுங்கியது.

"சுக்கிராச்சாரியாரின் தவத்தைக் கெடுப்பதற்கு, அவரை மயக்குவதற்கு, நான்தானா தேர்ந்தெடுக்கப்பட்டேன்."

"சுக்கிராச்சாரியாரின் தவம் வெற்றி பெற்றால், அப்புறம் தேவலோகம் அசுரர்களுக்கு அடிமையாகிவிடும்."

"தவஞ்செய்வோரை மயக்குவதற்கு ரம்பை மேனகை, ஊர்வசி, போன்றவர்களே தகுதியானவர்கள்."

"அவர்களால் முடியவில்லை."

"அவர்களால் முடியவில்லை யென்றதும், அவர்களுடைய இழி தொழிலுக்கு என்னை ஈடுபடச் செய்கிறீர்களா! அப்பா! என்னை அருமையுடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்ததெல்லாம், இந்தச் சுக்கிராச்சாரியாரை மயக்குவதற்குத்தானா? சயந்தி, தேவலோகத்து இளவரசி, அவள் கதை கடைசியில் எதிரிகளின் தலைவனிடம் வலியச் சென்று விழுந்தாள் என்று முடியவேண்டுமா?"

"சுக்கிராச்சாரியாரின் தவம் வெற்றி பெற்றுவிட்டால், அப்புறம் தேவலோகம் என்று ஒன்று இருக்காது. அது அசுரலோகமாகிவிடும். தேவர் குலமே அழிந்துவிடும்."

"அதற்காக எனது இளமை, அழியவேண்டும், இழிதொழிலை நான் புரியவேண்டும்!"

"உனது குலத்தைக் காப்பாற்ற நீ செய்யும் தியாகம் என்று எடுத்துக்கொள்!"

"நீங்கள் கூறுவது வேடிக்கையாயிருக்கிறது; உயிரினும் மேலான ஒழுக்கத்தை

விற்று, பின் வாழ்வில் எதைக் காப்பாற்றத் தியாகம் செய்யவேண்டும்?"

"சயந்தி! உன் கையில் தேவர்களின் கதி இருக்கிறது. நீ தயைசெய்தால் அவர்களைக் காப்பாற்றலாம். இல்லையென்றால் அவர்கள் அழிந்துவிடுவார்கள். மேலும் தந்தையின் கட்டளையை மகள் கேட்கவில்லை என்ற அபவாதம் வரும்."

"தந்தையின் கட்டளையை மகள் கேட்கவில்லையென்ற அபவாதம்! ஒரு தந்தை தனது மகளுக்கு இடும் கட்டளையா இது?"

"இதை மறுத்தால் தேவர்கள் உன்னைச் சபிப்பார்கள்; தேவகுரு கடுமையான தண்டனை தருவார்!"

"அவர்களுடைய தவம், பலம் எல்லாம் ஒரு அபலை சயந்திக்குத்தான் சாபந்தர உதவுகின்றன! உண்மையிலேயே அவர்களுக்கு தவமும், பலமும் இருந்தால், அசுரர் கூட்டத்தின் மீது, அவர்கள் குரு சுக்கிராச்சாரியார்மீது ஏன் சாபமிடக்கூடாது? கற்பகத்தரு, காமதேனு, கேட்டதைத்தரும் அற்புதங்கள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அசுரர் கூட்டத்தை வெல்லமட்டும் ஒரு பெண்ணின் அழகு தேவைப்படுகிறது."

"பெண்ணே! என் கண்ணே! உன் காலில் விழுந்து கேட்டுக்கொள்ளுகிறேன், எங்களை, தேவர்களையும் தேவருலகத்தையும் நீதான் காப்பாற்றவேண்டும். உன் காலில் விழுந்து வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

"வேண்டாம், வேண்டாம்! நான் போகிறேன். சயந்திக்குப் பழி வராது. இந்திரனின் மகள், தேவலோகத்து இளவரசி சுக்கிராச்சாரியாரை மயக்கச் சென்றாள் என்றுதான் கூறுவார்கள். நான் இந்த முயற்சியில் வெற்றி பெற்றாலும், தோல்வியுற்றாலும், அசுரர்களுக்கு எந்தவகையிலும் வெற்றிதான்."

"எப்படி?"

"எதிரிகளை வெல்லத் தங்கள் மகனை, பெண்களை அவர்கள் ஒருபோதும் அனுப்பியதில்லை!"

சுக்கிராச்சாரியார் யாரும் நுழையாக் காட்டின் மத்தியில் அகோரத்தவம் செய்துகொண்டிருந்தார். சயந்தி, தனது உடையை மாற்றித் தவக்கோலம்பூண்டு, அந்த இடத்துக்கு வந்தாள். நிட்டையிலிருக்கும் முனிவருக்குப் பக்கத்தில் மூண்டிருக்கும் புல் பூண்டுகளை அகற்றி, இடத்தைச் செப்பனிட்டாள். தாழ்ந்துகிடந்த பர்ணசாலையைத்திருத்தி, உள்ளிடத்தைக்கூட்டி, மெழுகிவைத்தாள். காட்டில் சுற்றி அன்றலர்ந்த மலர்களை எடுத்து வந்து, மாலைதொடுத்து, சுக்கிராச்சாரியாரின் காலடியில் போட்டாள்.

தியானம் முடிந்ததும், சுக்கிரன் கண்ணை விழித்துப் பார்த்தார். தூய்மையாக இருக்கும் சுற்றுப்புறத்தையும், ஒழுங்கான பர்ணசாலையையும் பார்த்ததும் அவருக்கு ஆச்சரியமுண்டானது. அவர் காலடியில் மலர்மாலை கிடந்தது. எதிரே தரையில் தாழ்ந்து தெண்டனிட்ட வண்ணம் ஒருவன் இருந்தான்.

"யாரப்பா நீ?" என்று சுக்கிரன் கனிவுடன் கேட்டார்.

"ஸ்வாமி! தக்க குருவைத் தேடி அலைந்து வந்தேன்; இந்தக் காட்டில் உங்கள் தவக்கோலத்தைக் கண்டதும், உங்களுடைய அடிமையாகிவிட்டேன். குருதேவே! இந்தச் சீடனை ஏற்றுக்கொள்ளுங்கள்! உங்களுக்குப் பணிவிடை செய்து என் காலத்தைப் போக்குவேன்."

மழலை மொழி மாறாத சிறுவன். அவன் தவம் புரியும் முனிவரைத் தேடி அலைந்திருக்கிறான். பாவம்! நமக்கும் ஒரு சீடன் இருந்தால் நல்லதுதானே. தவத்தை இன்னும் சீக்கிரத்தில் முடித்துவிடலாம் என்று சுக்கிரன் ஒத்துக்கொண்டார்.

"உன் பெயரென்ன?" சுக்கிரன் கேட்டார்.

"சயந்து!" சீடன் பதிலளித்தான்.

அன்றிலிருந்து குருவுக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் சீடன் செய்துகொண்டிருந்தான்.

சயந்துவைப்போல் அருமையான சீடன் கிடைப்பது கஷ்டம். காலையில் குரு எழுந்திருப்பதற்கு முன்னதாக எழுந்து, காலைக்கடன்களை முடித்து, குருவுக்குப் பிரியமான வேதஸ்லோகங்களைச் சீடன் படிப்பான். குரு கண்விழிப்பார். அவருடைய காலைக் கடன்கள் முடித்து நீராடியதும் சீடன் வைத்திருக்கும் தூய ஆடைகளை உடுத்துவார். பழைய ஆடைகளை சீடன் துவைத்துப்போடுவான். காலை உணவுக்கு வேண்டிய கனிவகைகள், சீடனால் பொறுக்கப்பட்டுத் தயாராக இருக்கும். அதை உண்டு, பின் தவஞ்செய்யத்தொடங்குவார். பின் இரவு யாகத்துக்கு வேண்டிய விறகுகளைச் சீடன் கொண்டுவருவான். மாலையில், குருவின் சந்தியாவந்தனத்துக்கு கமண்டலத்தில் புதிய நீர் தயாராக இருக்கும். மாலையில் யாகத்தீயை

சீடன் மூட்டிவிடுவான், வெகுநேரம் குரு அதன் முன் அமர்ந்து தவஞ்செய்வார்.

"சயந்து!" என்று குரு கூப்பிட்டாலே போதும். "இதோ, ஸ்வாமி! கொண்டுவந்தேன்" என்று அவர் கேட்கவிருந்ததை சீடன் கொண்டுவந்து முன்வைத்தான். இரவு படுக்கையில் படுத்ததும், சீடன் குருவின் காலைப் பிடித்துவிடுவான். அதில் எவ்வளவு பக்குவமாக, லாவகமாக சீடன் காலைப் பிடித்துவிடுவான். வலி இருப்பதே தெரியாமற்போய் விடும். மலர்க்கொத்தை எடுத்துத் தடவுவது போலிருக்கும். குரு அப்படியே, உறக்கத்தில் ஆழ்ந்துவிடுவார்.

ஒருநாள் விடியற்காலை சுக்கிராச்சாரியார் சற்று முன்னதாகக் கண்விழித்தார். இன்னும் பொழுது விடியவில்லை, இருள் சூழ்ந்திருந்தது. "சயந்து!" என்று கூப்பிட்டார். படுத்திருந்த சயந்து எழுந்துவரவில்லை. ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறுன் என்று நினைத்து, குரு தட்டுத் தடுமாறி, அவன் படுக்கையண்டை நின்று மீண்டும் கூப்பிட்டார். சீடன் எழுந்திருக்கவில்லை. பின் அருகில் உட்கார்ந்து சீடனைத் தட்டி எழுப்பினுர், குருவின் கை சீடனின் தோளில் பட்டு, மார்புமீதும் பட்டது. குரு திடுக்கிட்டார். பெண்போலத் தோன்றியது. சே! என்ன சபலம்! என்று தன்னைத் திடஞ் செய்துகொண்டு, "சயந்து! சயந்து!" என்று கூப்பிட்டார். சயந்து விழித்துக்கொண்டான் —சயந்தி விழித்துக்கொண்டாள். ஆனால் எழுந்திருக்கவில்லை. குரு எவ்வளவு கூப்பிட்டும், தூங்கிக்கொண்டிருப்பவனை எழுப்ப முடியவில்லை.

குருவின் கரம் நடுங்கியது, உள்ளத்தில் உணர்ச்சி அலைகள் மோதின. மெதுவாக உட்கார்ந்து, சீடனைத் தட்டி எழுப்பினுர். கை மெதுவாக தட்டிக்கொடுத்தது. தளிர் உடலைத் தழுவியது, தனக்குக் கிடைத்த சீடன் ஒரு கட்டுடல் தளரா கன்னி என்பதை உணர்ந்தார். பின்......மறுநாள் நடுப்பகல்வரை குருவும் சீடனும் பர்ணசாலையை விட்டு வெளிக் கிளம்பவில்லை. காலைச் சந்தியாவந்தனம், வேத பாராயணம், தியாகம், தவம் எல்லாம் மறைந்துவிட்டன.

சுக்கிராச்சாரியாரின் தவம் அழிந்துவிட்டது. தேவலோகத்தில் குதூகலம் பரவியது. இந்திரன் மதுக்குடங்களை மட்டற்று வழங்கினுன், தெய்வமாதர்கள் ஆடிப் பாடினுர்கள் தேவர்கள் காப்பாற்றப்பட்டனர். இந்திரனுடைய பதவி காப்பாற்றப்பட்டது. தேவர்களையும் இந்திரனையும் வென்றுவிட அசுரர்போட்ட திட்டங்கள் பயனற்றுவிட்டன.

சுக்கிராச்சாரியாரை மயக்கிய சயந்தி, அவரை அழைத்துக்கொண்டு அசுரர்களுக்குத் தெரியாத இடத்திற்குச் சென்று பத்து ஆண்டுகள் மறைவாக வசித்துவந்தாளாம். அசுரர் குருவும் சயந்தியின் காமத்தில் மயக்குண்டு, தனது கூட்டத்தையும், தானெடுத்த தவத்தையும் மறந்துவிட்டார். சுக்கிராச்சாரியார் சயந்தியுடன் அனுப்பப்பட்டபின், தேவ குரு பிரகஸ்பதி சுக்கிராச்சாரியாரைப்போல மாறுவேடமிட்டு, அசுரர்களிடம் சென்று, அவர்களுடைய குருபோல நடித்து. தவறுன யோசனைகளையெல்லாம் மிகத் தாராளமாக வழங்கி, அசுரர் போட்டிருந்த போர்த் திட்டங்களையெல்லாம் சீர்குலைத்துவிட்டாராம். இதன் பின், தேவர் குலத்துக்கு வரவிருந்த ஆபத்து நீங்கியதுடன், இந்திரனுடைய பதவியும் நிலைபெற்றது.

தேவர்களின் ஆபத்து நீங்கியது, இந்திரனுடைய பதவி காப்பாற்றப்பட்டது. ஆனல். அதற்கு அவர்கள் என்ன செய்தார்கள்? போர்க்களத்தில் வீர, தீரத்துடன் போராடினுர்களா? இல்லை! அசுரர்களைப்போல, நேரடிப்போரில் தேவர்கள் இறங்குவதில்லை, அவர்களால் முடியாது! அசுரர்குரு தவஞ்செய்து பலம் பெற்றதைப்போல, தேவகுருவும் தவம் செய்து வரம்பெறச் சென்ருரா? அந்த நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லை. தேவர்கள் தங்களது இளவரசியை எதிரிகளின் குருவிடம் அனுப்பிவைத்தார்கள், இந்திரன் தனது சொந்த மகளை விபசாரத் தொழிலில் ஈடுபடுத்தினுன். அந்தச் சூழ்ச்சியால் இழிந்த செய்கையால் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது.

தேவர்கள் வெற்றிபெற்றனர், இந்திரன் பதவியைக் காப்பாற்றிக்கொண்டான் தனது மகளின் கற்பை விலைகூறி, மானத்தை ஈடு வைத்து! (தொடரும்)

தோழர்களுக்கு

15-1-54-ல் வெளிவரும் 'மன்றம்', 4-பக்கக்கள் அதிகமாக இதே விலையில் பொங்கல் இதழாக வெளிவரும். தனி மலராக வெளியிடத் தற்போது வசதியில்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

ஆசிரியர்,
'மன்றம்'

மனதை வாட்டிய மாலை

[எழினி]

இருவரும் இளங் காதலர்கள்; இல்லற இன்பந்துய்த்துக்கொண்டிருக்கின்றனர். ஆடுவதிலும் பாடுவதிலும், ஊடுவதிலும் கூடுவதிலும், வேடிக்கை காண்பதிலும் விளையாடி மகிழ்வதிலும், நகையாடல் செய்வதிலும் உரையாடல் புரிவதிலும் பொழுதினைக் கழிக்கின்றனர். தலைவி விரும்பி உணவு ஆக்குகிருள்; தலைவன் விரும்பி உண்ணுகிருன். விருந்தினர் வருகின்றனர்; விரும்பி வரவேற்கின்றனர்; அவர்களோடு பேசியிருந்து மகிழ்கின்றனர்.

காதலன் எப்பொழுதும் தன்னேடு இருக்க வேண்டுமென்று காதலி எதிர்பார்க்கிருள். ஆனல் காதலன் பொருள் தேடுவதற்காக வெளியூர்கள் செல்லவேண்டியவனக இருக்கிருன். இல்லறம் இன்பகரமாக ஈடேறவேண்டுமானல், காதலன் எப்பொழுதும் தன்னேடேயே இருக்கவேண்டும் என்று தலைவி கருதுகிருள்; தலைவி கருதுவதைப்போல் இல்லறம் இனிதாக இருக்கவேண்டுமானல், தேவையான பொருள் கையில் இருக்கவேண்டும் என்று தலைவன் எண்ணுகிருன். இல்லறம் நடத்தவேண்டியது தலைவியின் கடமையாக இருக்கிறது; பொருள் தேடவேண்டியது தலைவனின் கடமையாக இருக்கிறது. அந்தக் கடமைகள் அவ்விருவரையும் சேர்ந்து வாழச் செய்யவும் காரணமாக இருக்கின்றன; அவர்களைப் பிரியவைக்கவும் காரணமாக இருக்கின்றன. இத்தகைய வியப்புக்குரிய தன்மையைக் கொண்டிருக்கிறது அவ்விளங் காதலரின் இல்லறம்.

தலைவன் உள்ளூரிலேயே உழைத்துப் பொருளீட்டும் தொழிலுடையவன் அல்லன். அவன் வெளியூர்களுக்குச் சென்று வாணிகம் செய்து பொருள் திரட்டவேண்டியவனக இருக்கிருன். தலைவியை விட்டுப் பிரிய தலைவனுக்கும் மனமில்லை; தலைவனைப் பிரியவிட தலைவிக்கும் மனமில்லை. தலைவியை நினைத்தால் பொருளை விடவேண்டியிருக்கிறது; பொருளை நினைத்தால் தலைவியை விடவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடி நிலை தலைவனுக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. அந்த நெருக்கடி நிலை இப்பொழுது தலைவனை வந்து அணுகத் தொடங்குகிறது.

முன்பு ஈட்டிவந்த பொருள் சிறிதுசிறிதாகக் குறைந்துவருகிறது. இந்த நிலை நீடித்துக் கொண்டுபோனல் வறுமையில் உழலவேண்டி வருமே என்று தலைவனின் கடமையுள்ளம் அச்சப்படுகிறது. எனவே அது, "பொருள் தேடப் போ!" என்று தலைவனைத் துரத்துகிறது. தலைவனுக்கோ தலைவியைவிட்டுப் பிரிய விருப்பமில்லை. "போ!" என்று சொல்லுகிறது அவனது கடமையுள்ளம்; "போக வேண்டாம்!" என்று சொல்லுகிறது இயல் புள்ளம். இரண்டிற்கும் இடையிலே தத்தளித்துக்கொண்டிருக்கிருன் தலைவன். இயல்புள்ளம் சொல்லுவதைக் கேட்பதா அல்லது கடமையுள்ளம் சொல்லுவதைக் கேட்பதா என்று தலைவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "தலைவி உன உதவியைக் கோரி நிற்கிருள்; அவளது ஊக்கம் இல்லாமல் நீ எந்தக் கடமையைச் செய்யமுடியும்?" என்று இயல்புள்ளம் அவனைக் கேட்கிறது. அதோடு மட்டுமல்லாமல் முன்பு ஒரு தடவை அவன் பொருள் தேடும் பொருட்டுப் பிரிந்து சென்றபோது, வழியில், அவன் கண்ட காட்சிகளையும் அப்பொழுது அவனுக்கு ஏற்பட்ட நினைவுகளையும் அவனுக்கு நினைவுபடுத்த இயல்புள்ளம் எண்ணுகிறது. அவ்வாறே அவனுக்கு நினைவு படுத்தவும் செய்கிறது.

முன்பு ஒருதடவை தலைவன் பொருள் தேடும்பொருட்டுத் தலைவிக்கு ஆறுதல்கூறிவிட்டு வெளியூருக்குப் புறப்பட்டான். அவன் பாலை வெளிகளையும் சிற்றூர்களையும் இடையிடையே கடக்கவேண்டியிருந்தது. கொடுமையான வெய்யில். கீழுள்ள மணலோ மிகக் கடுமையாகச் சுடுகிறது. தங்குவதற்கோ நிழல் சிறிதும் அகப்படவில்லை. தலைவன் வெய்யிலில் வேர்த்து விறுவிறுத்து, வெப்பம் தாங்கமுடியாமல் தளர்ந்து தள்ளாடி நடந்து

சென்றான். அவனுக்குச் சோர்வு ஏற்பட்டு இனி நடக்கமுடியாது என்று அவன் எண்ணும்போது, ஒரு சிற்றூர் அவன் கண்ணுக்குப் பட்டது. சிற்றூரை நெருங்கியபோது மந்தை வெளியைக் கண்டான். மந்தைவெளியில் பெரிய வேப்பமரம் ஒன்று இருந்தது, நிழலின் அருமையை நுகரவேண்டி தலைவன் அதன் கீழ்ப் போய் நின்றான்.

கல்வியில் சிறிதும் கவனம் செலுத்தாமல் விளையாட்டிலேயே பொழுதுபோக்கிக்கொண்டிருக்கும் சிறுவர்கள் நெல்லிக்காய் விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். தலைவன் அந்த விளையாட்டைச் சிறிதுநேரம் பொழுது போக்காகக் கவனித்துக்கொண்டிருந்தான். அந்தச் சிறுவர்கள் நெல்லிக்காய் போய் விழுவதற்காகக் கிழித்திருந்த கோடுகள், தட்டார் பொன்னுரைப்பதற்காக வைத்திருக்கும் கல்லிலுள்ள கோடுகளைப்போன்று இருந்தன. சிறுவர்கள் சிரித்து ஆரவாரித்து விளையாடுவதைத் தலைவன் ஒரு பக்கத்தில் ஒதுங்கி உட்கார்ந்து பார்த்துக்கொண்டேயிருந்தான். வெய்யிலின் வெம்மையால் வேப்பமரத்தினது இலைகளெல்லாம் காய்ந்து கருகிப்போய் இருந்தமையால், கிளைக் கொம்புகளின் நிழலைத்தவிர இலைகளின் நிழல் விழுவதற்கு வழியில்லாமற் போயிற்று. அதனால் வெய்யில் மரத்தின் அடியில் புள்ளி புள்ளியாகத் தரையில் காணப்பட்டது. இவைகளையெல்லாம் பார்த்து ஓய்வு பெற்றுக்கொண்டிருந்த தலைவன், உயரே அண்ணாந்து பார்த்தான். மரக்கிளையில் பருந்தின் கூடு ஒன்று தென்பட்டது. தலைவன் அந்தக் கூட்டை உற்றுநோக்கினான். அதில் பருந்து ஒன்று குஞ்சிணைப்பொறித்து, வெய்யில் தாங்கமாட்டாது வருந்திக்கொண்டிருந்தது. மேலே பருந்து வருந்திக்கொண்டிருப்பதையும் அவன் கண்டான்; கீழே சிறுவர்கள் சிரித்து விளையாடிக்கொண்டிருப்பதையும் கண்டான். இந்தக் காட்சிகள் தலைவனுக்கு வியப்பைத்தந்தன. அதற்குள் பொழுதும் சிறிது சிறிதாகத் தாழ மாலை வந்து சேர்ந்தது.

தலைவனுக்கு வெய்யிலினால் ஏற்பட்ட களைப்பு இனனமும் தீர்ந்தபாடில்லை. என்றாலும் சிற்றூருக்குள் சென்று பார்ப்போம் என்று மெல்ல நடக்கத் தொடங்கினான். அங்குள்ள குடிசைகளையும், வாழ்பவர்களையும், அவர்கள் வைத்திருக்கும் கருவிகளையும், அவர்களின் நடைநொடி யொழுக்கங்களையும் கண்ட தலைவன், அவர்கள் வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் என்பதை உணர்ந்து கொண்டான். உடனே அச்சம் அவன் உள்ளத்தைப் பிடித்து சிறிதுநேரம் உலுக்கியது. இனித் தொடர்ந்து இரவு வந்தபிறகும் வழி நடைப் பயணத்தை மேற்கொண்டால், வழிப் பறிக்கொள்ளைக்காரர்களிடம் சிக்கிக்கொள்ள நேரிடும் என்று அஞ்சிய அவன், இரவுப் பொழுதை அங்கு எங்கேனும் ஒளிமறைவான இடத்தில் தங்கியிருந்து கழித்துவிட்டுப், பொழுது புலர்ந்ததற்குப் பிறகு பயணத்தை மேற்கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தான். தலைமறைவான இடத்தில் போய்த் தங்கினான். பொழுது அப்பொழுதுதான் சாய்ந்துகொண்டிருந்தது.

தலைவனின் நினைவு வீட்டினிடத்தும், அங்கு தனியே இருந்த தலைவியினிடத்தும் சென்றது. தலைவி தன்னந்தனியே எப்படியெல்லாம் இருப்பாள் என்று கற்பனை செய்துபார்க்கத் தொடங்கிற்று அவனது உள்ளம்.

"ஆ! அவள் என்னைப்பற்றி எப்படியெல்லாம் எண்ணி வருந்துகிறாளோ! அவளைக் கண்டுகொண்டிருப்பதே எனக்குத் தனி இன்பம் பயப்பதாகுமே! நான் எடுத்த செயலை முடிக்கும்போது எனக்கு எவ்வளவு இன்பம் ஏற்படுமோ அவ்வளவு இன்பம் அவளைக் காணும்போதே ஏற்படுமே! அவ்வளவு இனிமையுடையவளை விட்டுவிட்டு வீணைகப் பொருளின் மீது விருப்புகொண்டு வந்துவிட்டோமே! இந்த நேரத்தில்தானே அவள் விளக்கேற்றி வைத்துக்கொண்டிருப்பாள்! 'அவர்தான் இல்லையே! விளக்கே எரிந்தால் என்ன? எரியாவிட்டால்தான் என்ன?' என்று அந்த விளக்கோடு சினங்கொண்டு, இது நேரம் வருந்திக்கொண்டல்லவா இருப்பாள்!" என்றெல்லாம் தலைவன் வருந்தினான்.

போன பயணத்தில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இயல்புள்ளம் தலைவனுக்கு இப்பொழுது அறிவுறுத்தி, "அம்மாதிரி வருத்தத்தை நீ மீண்டும் அடையவேண்டாம். எனவே பொருள்தேடப் போகவேண்டாம்" என்று கூறுகிறது. தலைவன் மீண்டும் கடமை உள்ளம் பக்கம் திரும்பிப் பார்த்தான். அது உடனே, "போ பொருள்தேட!" என்றது. தலைவன் சிறிதுநேரம் சிந்தித்துப் பார்த்தான், இயல்புள்ளம் சொல்லுவதுதான் அவனுக்குப் பொருத்தமானதாகப்பட்டது.

"தலைவியைவிடப் பொருள் எனக்குப் பெரிதல்ல! எனவே, கடமையை யுணர்த்தும் நெஞ்சே! நான் உன் சொல்லைக் கேட்கப் போவதில்லை! முன்பு நான் சென்றபொழுது, வேப்பமரத்தின் மேலிருந்த குஞ்சினை ஈன்று வருந்திக்கொண்டிருக்கவும், அதன் வருத்தத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது சிறு

வர்கள் எப்படி நெல்லி வட்டாடி சிரித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்களோ, அதுபோலவே, நெஞ்சே! நீ என் வருத்தத்தை ஒரு சிறிதும் கவனிக்காமல் சிரித்து மகிழ்ந்து கொண்டிருக்கிறாய்! முன்பு நான் பயணம் சென்றபோது வெய்யிலின் கொடுமையும், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் தோற்றமும் என்னை எவ்வளவு வருத்தின தெரியுமா? மீண்டும் நான் அந்த வருத்தத்தை அடையும்படி, நெஞ்சே! நீ பேறு வருத்தாதே! இனி உன் அழைப்புக்கு இணங்கி நான் வரமாட்டேன்! என்னைத் தொல்லைப்படுத்தாதே!" என்று தலைவன் கடமையுள்ளத்திறாகுத் திட்டவட்டமாகக் கூறிவிடுகிறான். வெளியூர்ப் பயணத்தை நிறுத்தித் தலைவியோடு இருக்க இசைந்துவிடுகிறான்!

ஃ ஃ ஃ

மேலே காட்டப்பட்டுள்ள காதற் காட்சி இளங்கீரனார் இயற்றிய நற்றிணை 3-ம் செய்யுளை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டதாகும்.

ஈன்பருந்(து) உயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழல்
கட்டளை அன்ன வட்டரங்(கு) இழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட்(டு) ஆடும்
வில்லேர் உழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை
உள்ளினென் அல்லனோ யானே உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே.

[நற்றிணை—3.]

[ஈன்பருந்து – குஞ்சு ஈன்ற பருந்து; உயவும் - அதன்பொருட்டு வருந்தி முயற்சிகள் எடுத்துக்கொள்ளும்; வான்பொரு - வானத்தை அளாவிய; நெடுஞ்சினை - நெடிய கிளைகளைப் பொருந்திய; பொரி அரை - பொரிந்த அடிமரத்தைபுடைய: புள்ளி நீழல் - இடையிடையே புள்ளிகள் தோன்றும் நிழலில்; கட்டளை அன்ன - தட்டார்ப் பொன்னுரைக்குங் கல்லில் தோன்றும் கோடுகளைப்போல; வட்டு அரங்கு - சூதாட்டக் கோடுகள் பொருந்திய இடத்தை; இழைத்து - அமைத்துக்கொண்டு; நெல்லி - நெல்லிக்காய்களால்; வில்எர் உழவர் - வில்லால் உழுது உண்ணும் வில் உழவர்களாகிய வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள்; வெம்முனை - கொடிய இருப்பிடங்களையுடைய; சீறூர் – சிற்றூர்களையுடைய; சுரன்முதல் - பாலைவெளியிடத்தில்; வந்த உரன்மாய் மாலை - நேர்ந்த நமது மன வலிமையைக் கெடுக்கும் மாலைப்பொழுதினை; உள்ளிய - கருதிய; மனை - மனையில்; மாண்ட - மாட்சிமைப்பட்ட; சுடரோடு - விளக்கை எற்றி அதன்சார்பில்; படர்பொழுது என - பலவும் நம்மைப்பற்றி அவள் நினைக்கும்பொழுது என்று; 'படர்பொழுது' என மாலையை 'உள்ளினேனல்லனோ யான்' என்று சேர்த்துக்கொள்ளவேண்டும்.]

ஃ ஃ ஃ

இஃது, முன்பு ஒரு காலத்தில் பொருள் தேடும் பொருட்டுப் பிரிந்த தலைவன் பின்னும் பொருள்தேடும்படி வற்புறுத்திய நெஞ்சைப் பார்த்துக் கூறியதாகச் சொல்லப்படும் இலக்கணத்தின்பாற்பட்ட செய்யுளாகும். இது பாலைத் திணையைச் சார்ந்ததாகும்.

காதலனும் காதலியும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியும்போது எப்படிப்பட்ட வருத்த நிலையை அடைகின்றனர் என்பதை இளங்கீரனார் இப்பாட்டில் அழகுபட விளக்கிக்காட்டுகிறார்.

இல்லறத்தை இனிது நடத்துவது தலைவியின் கடமையாகவும், பொருள்தேடித் திரட்டுவது தலைவனின் கடமையாகவும் இருக்கின்றன. இல்லறத்தை நிறைவேற்றும்போது

வினாவும் விளக்கமும்

திராவிட முன்னேற்றக் கழகம் தனியே தோன்றி இயங்குவதற்குப் பெரியார் இராமசாமி அவர்கள் திருமணம் செய்துகொண்டதுதான் காரணமா?

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கான காரணங்கள், தெள்ளத் தெளிவாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் 1949-ம் ஆண்டு பிற்பகுதியில் வந்த 'திராவிட நாடு' 'மாலைமணி' இதழ்களில் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கின்றன. என்றாலும் இக்காலத்தவர் உண்மை நிலையை ஓரளவுக்கு உணர்ந்துகொள்ள, சுருக்கமாகத் தெளிவுபடுத்துகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தனியே தோன்றுவதற்குப், பெரியார் திருமணம் செய்துகொண்டார் என்ற அளவோடு அமைந்த காரணம் மட்டுமல்ல, அதனோடு தொடர்புடைய ஒரு சிலவும் முக்கிய காரணங்களாகும்.

திருமணம் என்பது அவரவர் தனிப்பட்ட விருப்பத்தைப் பொறுத்தது, அதில் பிறர் தலையிடுவது முறையல்ல, சரியல்ல ஆகையால், பெரியார் திருமணத்திலும் பிறர் தலையிட உரிமையில்லை என்ற வாதத்தை ஒருசிலர் முன்வைக்கக்கூடும். வயதேறிய கிழவர்கள் வயதில் மிகக் குறைந்த மங்கையரை மணம் முடித்துக்கொள்வது அடாததாகும், என்று எந்தப் பெரியார் கூறியதை எந்தத் தொண்டர்கள் கேட்டு மகிழ்ந்து போற்றிவந்தார்களோ, அதே பெரியார் அதே கூற்றைப் புறக்கணிக்கும்போது, அதே தொண்டர்கள் அந்தத் தவற்றை வேதனையோடு சுட்டிக் காட்டவேண்டியவர்களானார்கள். அது பொறுத்துக்கொள்ளக்கூடிய தவறுதானே என்று ஒரு சிலர் கூறக்கூடும். ஆனால் பெரியார் அவர்கள் அதற்கு ஒரு சிறிதும் இடம் வைக்கவில்லை. ஏனென்றால், பெரியார் அவர்கள் தாம் செய்துகொண்டதைத் திருமணம் என்றே ஒப்புக்கொள்ளவில்லை, "திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு" என்றுதான் கூறினார். எனவே "சொந்த விருப்பத்தைப் பொறுத்த திருமணத்தில் பிறர் தலையிடலாமா" என்ற வாதத்திற்குப் பெரியாரே இடம் வைக்கவில்லை, "திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு" என்று கூறிவிட்டார்.

அந்த 'ஏற்பாடு' சொந்த நடவடிக்கையைப் பற்றியதாக இருந்தால், அதில் யாரும் தலையிடவேண்டிய அவசியமில்லையே என்று சிலர் கேட்கக்கூடும். ஆனால் அந்த 'ஏற்பாடு' சொந்த நடவடிக்கையைப் பொறுத்ததாக அமையாமல், இயக்கத்தையும், இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் உட்படுத்துவதாக இருந்த காரணத்தால்தான், இயக்கத்தவர்கள் அதில் தலையிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த 'ஏற்பாடு' தான் என்னவென்றால், எதிர்காலத்தில் இயக்கச் சொத்துக்களைப் பாதுகாக்கவும், இயக்கத்தை நடத்திச் செல்லவும், இயக்கத்தில் தமக்கு நம்பிக்கையாளர்களாக ஒருவரும் படவில்லை என்ற காரணத்தாலும், அந்தச் செயல்களைச் செய்ய தமக்கு நம்பிக்கையாளராக மணியம்மையார் ஒருவரே படுகின்ற காரணத்தாலும்; இயக்கச் சொத்துக்களுக்கும், இயக்கத்துக்கும், எதிர்காலத்தில், தமக்குப்

ஏற்படும் மகிழ்ச்சி தலைவனைக் காணும் அளவிலேயே தலைவிக்கு ஏற்பட்டுவிடுகிறது; அதுபோல பொருள் தேடும் வினை முடியும்போது ஏற்படும் மகிழ்ச்சித் தலைவியைப் பார்க்கும்போதே தலைவன் பெறுகிறான். இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிய விரும்புவதே இல்லை. அப்படியிருந்தும் பிரியும்படியான நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. காதல் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் ஒன்றை போன்று துரத்திப் பிடிக்கின்றன. இப்படிப் பட்ட வியப்புக்குரிய மனைவாழ்க்கையைப் புலவர் நயம்படப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

தலைவனின் இயல்புள்ளம் வருத்தம் அடையும்போது, கடமையுள்ளம் மகிழ்ச்சியால் விளையாடுகிறது என்பதற்கு, குஞ்சினை ஈன்ற பருந்து வருந்துவதையும், அந்த வருத்தத்தைப் பற்றிக் கவலைகொள்ளாமல் கல்லாத சிறுவர்கள் நெல்லிவிட்டு ஆடுவதையும் உள்ளுறை உவமையாகப் புலவர் கூறியுள்ள திறம் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

பிறகு வாரிசாக அமையவேண்டி திருமணம் என்ற பெயரால் ஒரு ஏற்பாடு செய்யப்போகிறேன்' என்னும் கருத்துப்பட பெரியார் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள்.

இந்த 'வாரிசு ஏற்பாடு', இயக்கத் தோழர்கள் அத்துணைப் பேரையும் நம்பிக்கைக்குப் பற்றுக்கோடற்றவர்களாக்கி, மிகவும் அவமதிப்பதாக இருந்த காரணத்தாலும், இயக்கத்திற்கு வாரிசு ஏற்படுத்தும் முறை ஜனநாயகப் பண்பிற்கு முற்றிலும் முரண்பட்டதாகவும், ஜனநாயகப் பண்பு படைத்த யாராலும் வேண்டப்படாத சர்வாதிகாரப் போக்கு கொண்டதாகவும் இருந்த காரணத்தாலும் இயக்கத்தைச் சார்ந்த பெரும்பான்மையானவர்கள், திருமணம் என்ற பெயரால் நடத்தப்படவிருந்த வாரிசு ஏற்பாட்டுமுறையை எதிர்த்தனர்; கைவிடும்படி பெரியாரைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர்; கண்ணீர்விட்டுக் கேட்டுக்கொண்டனர்; தூதுக்குழுக்களை அனுப்பிக் கேட்டுக்கொண்டனர்; பெரியார் எல்லாவற்றையும் புறக்கணித்தார்; வாரிசு ஏற்பாட்டைச் செய்துமுடித்தார்; கண்ணீர்விட்ட தொண்டர்கள் இனிப் பெரியார் தலைமையின் கீழ் ஜனநாயகப் பணிக்கு இடமில்லை என்று வெளியேறினர்; தம் உள்ளத்தில் பதிந்து கிடந்த கொள்கை நல்லமுறையில் நாட்டில் நிறைவேற்றிவைக்க **திராவிட முன்னேற்றக் கழகம்** என்னும் நிறுவனத்தைக் கண்டார்கள். பெரியாரின் போக்கை இயக்கத்தின் சிறுபான்மையர் ஏற்றுக்கொண்டார்களே என்றால் அவர்கள் அவமதிப்பை முழுக்க முழுக்கத் தாங்கிக்கொள்ளும் அளவுக்கும், சர்வாதிகாரப் போக்கை முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ளும் அளவுக்கும் மனப்போக்கு படைத்தவர்களாக இருந்தார்கள்; எனவே பெரியாரின் போக்கை முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டார்கள்.

"பெரியார் அவர்களின் திருமண முயற்சி இயக்கத்தின் எதிர்காலத்தைப் பாதிப்பதாக இருப்பதால், திருமண முயற்சியைக் கைவிட வேண்டும் என்று பெரியாரைக் கேட்டுக்கொள்வது" என்னும் கருத்தமைந்த தீர்மானம் ஒன்றை, *1949*-ல் திருச்சியில், தோழர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தோட்டத்தில், அவர்கள் தலைமையில் கூடிய திராவிடக் கழக நிர்வாகக்குழு நிறைவேற்றியது. அந்தத் தீர்மானத்தைத் தோழர்கள் தி. பொ. வேதாசலம், எஸ். குருசாமி உள்பட பலரும் ஆதரித்தனர். பெரியாரின் திருமண 'ஏற்பாடு' இயக்கத்தின் எதிர்காலத்தைப் பாதிப்பதாகும் என்ற உண்மையைத் தோழர் எஸ். குருசாமி போன்றவர்கள் முதலில் ஒப்புக்கொள்ளவே செய்தனர்; ஆனால் பின்னர் தம் இயல்பை மாற்றிக்கொண்டனர்!

சொத்துக்கு வாரிசு எடுப்பது என்பதே மூடப்பழக்கத்தில் ஒன்று என்று எந்தப் பெரியார் 1932—33 ஆண்டுகளில் எழுதியும், பேசியும் வந்தாரோ, அதே பெரியார் அந்த வாரிசு முறையைக் கையாளும்போது, தவற்றைத் தொண்டர்கள் சுட்டிக்காட்டவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது; எனவே சுட்டிக் காட்டினார்கள்.

தொண்டர்களை அவமதிப்பாகக் கருதும் முறையிலும், இயக்கச் செயல்களை எதேச்சாதிகாரமாகச் செய்யும் முறையிலும் பெரியார் அவர்கள் இதற்குமுன்னால் எவ்வளவோ தடவைகள் நடந்திருக்கிறாரே, அப்பொழுதெல்லாம் அவற்றை ஏற்றுக்கொண்டவர்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளக் கூடாதா என்று சிலர்க்குக் கேட்கத்தோன்றும். அப்பொழுதும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால் முணுமுணுப்போடு பொறுத்துக் கொண்டார்கள், "காலம் மாறும், நல்ல நிலை பிறக்கும்" என்ற எண்ணத்தால், அதுபோல இப்பொழுதும் பொறுத்துக் கொள்ளக் கூடாதா என்று சிலர் கேட்கக்கூடும். ஆனால் திருமணம் என்ற பெயரால் செய்யப்பட்ட வாரிசு ஏற்பாட்டு முறை பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு, ஜனநாயக வரம்பை மிக மீறின காரணத்தால்தான், "இனி பொறுக்க முடியாது; இனிய நெறி காண்போம்" என்ற முறையில் பெரும்பான்மையான தொண்டர்கள் வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தை *17-9-1954*-ம் நாளில் நிறுவினார்கள்.

எனவே திருமணத்தைவிடத் திருமணத்தோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்ட ஏற்பாடுகள்தாம், திராவிட முன்னேற்றக்கழகம் தனியே தோன்றுவதற்கு முக்கிய காரணங்களாக விளங்குபவையாகும்.

○ ○ ○

நடைமுறைத் திட்டங்களிலே சிறிதளவு வேறுபாடு காணப்பட்டாலும், அரசியல்—பொருளாதார—சமூகக் கொள்கைகளில் ஏறத்தாழ ஒன்றாகக் காணப்படும் திராவிடக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இனி ஒன்றுசேர்ந்து ஒரே இயக்கமாக இயங்க வழி பிறக்காதா?

கழகத்தை ஜனநாயக விதிகளுக்கேற்ப நடத்திச் செல்ல, இரண்டு கழகங்களும் ஒருமனப்பட்டு முன்வந்தால், இரண்டும் ஒன்று சேர்வது

கடினமான வொரு செயலாக இருக்காது. கழகத்தில் உண்மையாகப் பாடுபடும் பெரும் பான்மையோரின் விருப்பத்துக்கு மதிப்பளிக் கும் ஜனநாயகப் பண்பின் அடிப்படையில் தோன்றும் இணைப்பு அமைப்பில் இணைய திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் தயங் காது. ஆனால் அந்த அடிப்படையில் இணைய திராவிடக் கழகம் முன்வருமா என்பதுதான் ஐயப்பாட்டிற்குரிய கேள்வியாகும்.

திராவிடக் கழகத்தினுடைய நோக்கம், போக்கு ஆகியவைகளைக் கூர்ந்து கவனிப் போர் ஜனநாயகப் பண்பின் அடிப்படையில் இணைவதற்கான வழியை அதனிடம் எதிர் பார்க்க இயலாது என்பதை எளிதில் உணர்ந்துகொள்வர். இந்த நிலையில் இரண் டும் இணைவதற்கான சூழ்நிலை ஏற்படுமா என் பது ஐயப்பாடே!

திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிடக் கழகமும் ஒன்றுசேர்வதற்கான வழிவகை ஏற்படாவிட்டாலும், இரண்டும் ஒன்றோ டொன்று மோதாமல், இருப்புப்பாதையின் இரண்டு தண்டவாளங்களைப்போல் தனித் தனிப் பிரிந்தே நின்று தனித்தனிப் போக்கில் இயங்கலாம் என்பதுதான் திராவிட முன் னேற்றக் கழகத்தின் குறிக்கோளாகும். ஆனால் திராவிடக் கழகமோ திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்துக்கட்டுவதைத்தான் தன் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

திராவிடக் கழகத்தின் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் பெயரையோ, ஏனைய திராவிடக் கழகத்தவர்கள் பெயரையோ சொல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் நா ஒருபோதும் கூசியதில்லை. ஆனால் திரா விட முன்னேற்றக் கழகத்தாரின் பெயரைச் சொல்லுவதென்றால், திராவிடக் கழகத் தார்க்கு எப்பொழுதும் நா கூசுகிறது.

பொதுவாக நடைபெறும் கூட்டங்களில் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்களோடு உடன் கலந்துகொள்ளவேண்டிய நிலை ஏற்பட் டால், அதற்காக மனம் வெறுப்படைவதில்லை திராவிட முன்னேற்றக்கழகத்தார். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகக் கொடியின் கீழோ, தி. மு. கழகக் கூட்டங்களிலோ, தி. மு. கழகத் தோழர்கள் கலந்துகொள்ளும் பொதுப் பண்பான கூட்டங்களிலோ தி. கழகத்தினர் கலந்துகொள்ளக்கூடாது என்ற தீர்மானத் தைத் தி. க. மத்திய நிருவாகக்குழு நிறை வேற்றிவைத்திருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படை யில், இரண்டு கழகங்களும் இணைவதற்கான வழி, அவ்வளவு எளிதாக எப்படிப் பிறக்கக் கூடும் என்பதைக் கேள்விகேட்கும் நடுநிலை யாளர்கள் உணரவேண்டும்.

இணைப்பு, யாரோடு யார் இணைவது என்ற பிரச்னையின் அடிப்படையிலில்லாமல், ஒத்த ஜனநாயக அமைப்பு முறையின் அடிப்படை யில் நிகழுவது என்று அமையுமேயானால், அதனை திராவிட முன்னேற்றக் கழகம் என் றும் ஏற்றுக்கொள்ளவே செய்யும்.

இரண்டும் இணைவதற்கான வழி பிறக்கா விட்டாலும், இரண்டும் தனித்தனியே— கொள்கை எதிரிகளை எதிர்க்கும் முறையில், ஆனால் தமக்குள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாமல், "இரட்டைக்குழல் துப்பாக்கி" யைப்போல் வாழலாம் என்ற சிறந்த—பெருந் தன்மையான—அரசியல் நாகரிகத்துக்கு ஒட் டிய அறிவுரையைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறிவருகிறார்கள்.

○ ○ ○

கல்லிலும் செம்பிலும் மண்ணிலுமா ஆண்டவன் தனித்து உறைகிறார் என்று வினா எழுப்புபவர்கள், பிள் ளையார் சிலையை உடைப்பதன் மூலம் கடவுள் தன் மையை ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று ஆகிறதல்லவா?

வைதீகர்கள் எதைக் கடவுள் தன்மை என் கிறார்களோ அந்தக் கடவுள் தன்மை, எந்தக் கல் — செம்பு — மண் ஆகியவற்றினாலான உருவச்சிலைகளில் அது உண்டு என்கிறார் களோ அந்த அந்த உருவச்சிலைகளில் அது இல்லை என்பதை நிரூபிப்பவர்களே பிள்ளை யார் சிலையை உடைப்பவர்களே யல்லாமல், அந்தக் கடவுள் தன்மையை ஒப்புக்கொண்ட வர்கள் ஆகமாட்டார்கள். 'கடவுள் தன்மை'— 'சக்திவாய்ந்த சிலை' ஆகிய இரண்டு கருத்துக் களின் பொய்மையை அம்பலப்படுத்திக் காட் டுவதே பிள்ளையார் உடைப்பின் முக்கிய நோக் கமாகும்.

பிள்ளையாரை உடைப்பவர்கள் பிள்ளையார் பொம்மைகளை உடைத்தார்களே யல்லாமல், சக்திவாய்ந்த பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார் விக்கிரகங்களை அவர்களால் உடைக்கமுடியாது என்று குன்றக்குடி அடி களார் சொல்லியதாகச் சொல்லப்படும் கருத்து உண்மையாயின், அந்த அறைகூவ லின் ஏற்பை ஏற்றுக்கொள்ள அவர் தயா ராயின், அவர் அனுமதியின்பேரில், அவர் விருப்பத்திற்கிணங்க, அவரே சுட்டிக்காட்டும்

எந்தப் பிள்ளையாரை வேண்டுமானாலும் உடைத்துக்காட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யலாம்! உடைக்க முடியுமா அல்லது முடியாதா? கடவுள் தன்மை உடைகிறதா அல்லது உடையாமல் நிற்கிறதா? என்று பார்த்துவிடலாம்! மேற்கண்ட கூற்றுக்கு உரியவர்கள் தயாராகட்டும்!

○ ○ ○

சாக்கிய நாயனர் கடவுளைக் கல்லால் எறிந்தே அருள் பெற்றதைப்போல, பிள்ளையாரை உடைப்பவர்களும் கடவுள் அருளைப் பெறுவர் என்று ஒரு மடாதிபதி கூறுகிருரே, உண்மை அப்படித்தானே?

பிள்ளையாரை உடைப்பது என்பது கடவுள் அருளைப் பெறும் வழிகளிலே ஒன்றுதான் என்பதை அந்த மடாதிபதியும் அவரைச் சார்ந்தோரும் நாணயமாகவும், நேர்மையாகவும் கருதுகிருர்கள் என்ருல், வைதீகர்கள் நாஸ்திகம் பரவிவிட்டதென்று கொதித்தெழுந்து சீறவேண்டியதில்லை; மதம் அழிந்துவிட்டது என்று ஒப்பாரிவைக்கவேண்டிய அவசியமில்லை; கடவுள் பக்தி குறைந்துவிட்டது என்று அங்கலாய்க்க வேண்டியதில்லை; வாதத்திற்கு அஞ்சி தன்னந்தனியே ஏதேதோ உளறிக்கொட்டவேண்டிய அவசியுமில்லை!

கடவுளின் அருளைச் சாக்கிய நாயனர் போலப் பெறுவதற்குக் கடவுள் சிலைகளை உடைப்பதே போதுமான வழி என்ருல், இந்த எளிய—உயர்ந்த—குறுக்கு வழியை எல்லோரும் பின்பற்றுவதற்கான முறையில் அந்த மடாதிபதி பாடுபடலாமே! ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, தூபதீப நைவேத்தியங்காட்டி, அவனுக்குக் கோயில்கள் கட்டிக், குளங்கள் வெட்டித், தேர்திருவிழாக்கள் நடத்திக், காணிக்கைச் செலுத்தி, மான்யம் விட்டு அவனது அருளைப் பெறுவதைவிட, அவனது உருவச்சிலையை உடைத்து அருளைப்பெறுவது செலவில்லாத செயலாக இருக்கிறதே! இந்த எளிய முறையை அந்த மடாதிபதி நாடெங்கும் பரப்ப முயற்சி எடுக்கலாமே! முறையைச் சொல்லியவர் அதனைச் செய்துகாட்டியிருக்கலாமே! ஆனல் கடளின் அருளைப் பெற அவர் அந்த வழியைப் பின்பற்றினதாகத் தெரியவில்லை! இதிலிருந்தே அறிந்துகொள்ளலாம் எதை எதையோ பற்றி உளறிக்கொட்டுபவர் இதனையும் பற்றி உளறிக்கொட்டினர் என்று! அவ்வளவுதான்!

சிறுவன் தந்த பதில்

குடியரசுக் கட்சி சார்பில் நடைபெற்றுக்கொண்டிருந்த மாபெருங் கூட்டத்தின் ஒரு முனையில் ஒரு சிறுவன் ஆறு நாய்க்குட்டிகளை வைத்துக்கொண்டு விலை கூவிக்கொண்டிருந்தான். அன்று பிறந்தவை போன்று அக்குட்டிகள் காணப்பட்டன. ஆனல் நாய்க்குட்டியை வாங்க யாரும் முன்வரவில்லை.

சிறுவன், அருகில் நின்றுகொண்டிருந்த தடித்த மனிதர் ஒருவரின் கையைப்பிடித்து, "ஐயா, தாங்கள் தயவுசெய்து இந்தக் குடியரசு நாய்க்குட்டிகளில் ஒன்றை வாங்க வேண்டிக் கொள்கிறேன்" என்ருன்.

சிறுவனின் கனிவான பேச்சும் "குடியரசு நாய்க்குட்டிகள்" என்ற சொல்லும் அந்த மனிதரின் மனதை இளகவைத்தது. உடன் அவர் இரு நாய்க்குட்டிகளை வாங்கிச் சென்ருர்.

சில வாரங்களுக்குப் பின் அந்த தடித்த மனிதர் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நடந்த ஒரு கூட்டத்திற்கு வந்தபோது, நாய் விற்கும் சிறுவன் அங்கேயும் இருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டார். அவன் அருகே சென்றபோது, "ஜனநாயக நாய்க்குட்டிகள்" என்று கூறுவது கேட்டது.

உடன் அந்த மனிதர் சிறுவனைப் பார்த்து "தம்பி! முன்பு நீ இவைகளை விற்பதற்கு 'குடியரசு நாய்க்குட்டிகள்' என்று கூறினய், இப்பொழுது 'ஜனநாயக நாய்க்குட்டிகள்' என்று கூறி விற்க முயல்கிருயே" என்று கேட்டார்.

சிறுவன் தயங்கியவாறு, "ஆமாம் ஐயா, உண்மைதான். சென்றவாரந்தான் இக்குட்டிகள் கண்திறந்தன" என்று பதிலளித்தான்.

கடல் நீர் ஏன் கரிக்கிறது?

கடல் நீர் மிகவும் உப்பாயிருக்கிறது. மற்ற ஆறு, குளம், ஏரி, இவைகளில் இருக்கும் நீர் உப்பாக இருப்பதில்லை. சில கிணறுகளில் தண்ணீர் சிறிது உப்பாக இருந்தபோதிலும், கடல் நீரைப்போல கடுமையான அளவு இருப்பதில்லை. ஆறுகளில் ஓடும் நீர், "நல்ல" தண்ணீராகக் குளிப்பதற்கு, குடிப்பதற்கு உதவியாக இருக்கும்பொழுது, அவை போய் கலக்கின்ற கடல்மட்டும் தொடமுடியாத அளவு உப்பாக இருப்பானேன்? கடல் உப்பாக ஆனதற்கு, ஆறுகள்தாம் முதற் காரணம்.

பூமியின்மேல் இருக்கும் உப்புகளையெல்லாம் அரித்து, அரித்து, சுரண்டி சுரண்டி, ஆறுகள் கொண்டுபோய் கடலில் தள்ளிவிடுகின்றன. வெப்பமான கோளத்திலிருந்து, பூமி குளிர்ந்து, மேல் இருக்கும் காற்றுமண்டலம் குளிர்ந்து, மேகங்கள் தோன்றி, அவை குளிர்ந்து, மழை பெய்ய ஆரம்பித்த காலத்தில், இந்த உப்பைச் சுரண்டும் வேலையும் ஆரம்பித்துவிட்டது. மலைகளிலும், மேட்டு நிலங்களிலும் பொழியும் மழை நீர், அங்கு இருக்கும் உப்புகளைக் கரைத்துக்கொண்டு போகிறது. இவ்வாறு பல ஆறுகள், பல நூற்றாண்டுக் காலங்களாக, நிலத்திலிருக்கும் உப்புகளைக் கடலில்கொண்டுபோய்த் தள்ளிவிட்டன. கடலிலிருந்து சூரிய வெப்பத்தில், நீராவி கிளம்பும்பொழுது, உப்புச் சத்து கீழே தங்கிவிடுகிறது. மேலெழுந்த நீராவி, மேகமாகிப், பின் குளிர்ந்து, மலைமீது மழையாகப்பொழிந்து, மீண்டும் உப்புக்களைக் கரைத்து வந்து, கடலில் சேர்த்துவிடுகிறது. இவ்வாறு, உப்பு ஏராளமாக சேர்க்கப்பட்டு, கடல்நீர் கரித்துவிட்டது.

ஆறுகள் உப்பை மட்டுமல்ல, மற்றும் பலவித உலோகங்களையும் அடித்துப்போய்க் கடலில் சேர்த்துவிடுகின்றன. கடல் நீரைப் பிரித்து ஆய்ந்த விஞ்ஞானிகள், 50 வகைக்கு மேல் உப்புகள், உலோகங்கள் அதில் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். தங்கம், வெள்ளி, மக்னிஷியம் போன்ற பல கனிப்பொருள்கள் கலந்தும், தனித்தும் கடல்நீரில் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, காவிரி வரும் மலைச் சரிவிலிருந்து பொன் தூள்கள் ஆற்று நீரில் கலந்து வருகின்றன. பொருநையாற்றில் தாமிரம் கலந்து வருகின்றது. இவ்வாறு, ஆறுகள் பாய்ந்துவரும் வழியில் காணப்படும் கனிப்பொருள்களும், உப்புகளும், நீரில் கலந்து கடலுக்குப்போய்விடுகிறது.

ஒரு மைல் நீளம், அகலம், உயரமுள்ள கடல் நீரைப் பிரித்தால், அதில் சுமார் ரூ. 44,18,00,000 பெறுமானமுள்ள தங்கமும், ரூ. 3,80,00,000 மதிப்புள்ள வெள்ளியும் கிடைக்குமாம்.

தங்கம், வெள்ளி இவற்றைக் கடல்நீரிலிருந்து பிரித்தெடுத்துக்கொண்டால் என்ன என்று தோன்றும். அதற்கான முயற்சியும், செலவும், கிடைக்கும் பலனைவிட அதிகமானதாக இருக்கும். கடல் நீரில் கலந்திருக்கும் மக்னிஷியத்தைப் பிரித்தெடுக்கும் முறை இப்பொழுது கையாளப்படுகிறது. கடல் நீரிலிருந்து எளிதாகக் கிடைக்கும் பொருள் உப்பு ஒன்றுதான்.

இறந்தவரின் தோல் இருப்பவருக்குப் பயன்படும்

இறந்தவர்களின் தோலை உரித்து உயிர் வாழ்வோர்க்குத் தேவைப்பட்டால் ஒட்ட வைக்கலாம் என்ற அரிய முறையை, அமெரிக்கா மிசௌரி மாகாணத்தின் செயின்ட் லூயியைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ் பிரௌன், டாக்டர் மைனர் பிரியாவ் ஆகிய இருவரும் கண்டறிந்திருக்கின்றனர். ஒரு மனிதன் இறந்து, பத்துமணி நேரத்திற்குள் அவனது தோல் உரித்தெடுக்கப்பட்டுக் காப்பாற்றி வைக்கப்பட்டால், தீயின் காரணமாகவும் உராய்வின் காரணமாகவும் தோலற்றுப் போய் அழகற்றவராகக் காணப்படுபவர்க்கு, அந்தத் தோலை ஒட்டுவதன் மூலம், அத்தகையோரை அழகுடையவராக ஆக்கலாம் என்று கூறுகின்றனர்.

★ மின்னும் நட்சத்திரங்கள் ★

இரவில் நட்சத்திரங்கள் மின்னுதல் கவிஞனுக்கு காவிய நயத்தைக் கூட்ட உதவினாலும் நட்சத்திரங்களைப்பற்றி ஆராய்பவனுக்கு அவை இடையூறாகவே அமைகிறது. தொலை நோக்கியால் பார்த்தால்கூட மின்னுந் தன்மை தான் பெரிதாகப்படுகிறது.

ஆனால் நட்சத்திரங்கள் இயல்பாகவே மின்னுந் தன்மைபெற்றதல்ல. ஞாயிற்றைப் போன்று அவைகளும் தன்னொளிகொண்ட கோளங்களாகும். நட்சத்திரங்களிலிருந்து கிளம்பி நேராக வரும் ஒளிக் கதிர்கள் பூமியைச் சூழ்ந்துள்ள புகைவெளி (Atmosphere) யை ஊடுருவும் தன்மையிழந்து பல கோணங்களில் வளைக்கப்பட்டு பூமியை அடைகிறது. ஒளிக் கதிர்கள் நேராக வராமல் மாறுபட்டு ஒழுங்கற்ற நிலையில் வருவதால், ஒளி கொடுக்கும் பொருள், நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கமுடியாது மறைந்து மறைந்து தோன்றும் தன்மையை அடைகிறது. இதையே நாம் நட்சத்திரங்கள் மின்னுகின்றன என்கிறோம்.

பூமியைச் சூழ்ந்துள்ள புகைவெளி வேறுபட்ட வெப்ப நிலை கொண்ட பல அடுக்குகளாக அமைந்திருக்கிறது. இந்த அடுக்குகளின் வெப்பநிலைகள் அடிக்கடி மாறுந்தன்மையுடையதாக இருக்கின்றன. நட்சத்திரத்லிருந்து கிளம்பிவரும் ஒளிக்கதிர் ஒருவித வெப்பநிலை கொண்ட புகைவெளியின் முதல் அடுக்கை ஊடுருவும்போது நேராகக் கடக்கமுடியாமல் கொஞ்சம் வளைந்து சென்று மறுபடியும் அடுத்த அடுக்கைக் கடக்கும்போது மறுபடியும் வளைகின்றது. நட்சத்திரத்திலிருந்து வரும் ஒளி தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். புகைவெளியிலுள்ள அடுக்குகள் வெப்ப நிலையில் அடிக்கடி மாறுபட்டுக்கொண்டிருப்பதால் ஒளிக்கதிர்கள் அவைகளைக் கடக்கும்போது ஒவ்வொருமுறையும் ஒவ்வொருவிதமாக வளைகிறது. முதல் அடுக்கிலிருந்து ஒளிக்கதிர் ஒரு கோணத்தில் வளைந்து மறு அடுக்கைக் கடக்கும்போது முதல் அடுக்கின் வெப்பநிலை மாறுபடுவதால் அப்பொழுது ஊடுருவும் ஒளிக்கதிர் வேறு கோணத்தில் திரும்பும். இப்படி ஒளிக் கதிர்கள் சீர்கெட்டு நேரற்ற பாதையில் வந்து பூமியை அடைவதால் நட்சத்திரங்கள் மின்னுந்தன்மை பெறுகின்றன.

நாம் இரவில் அடிவானத்தில் தோன்றும் நட்சத்திரங்களையும் உச்சியில் இருக்கும் நட்சத்திரங்களையும் காணலாம். உச்சியில் இருக்கும் நட்சத்திரத்தைவிட அடிவானத்தில் தோன்றும் நட்சத்திரம் அதிகமாக மின்னும். இவ்விதம் வேறுபடும் காரணம், அடிவான நட்சத்திரத்தின் ஒளிக்கதிர்கள், உச்சி நட்சத்திரத்தின் ஒளிக்கதிர்களைவிட நீளமான பாதையிலும் அடர்த்தியான அடுக்குகளிலும் செல்லவேண்டியிருக்கின்றன. இதன் காரணமாகவே கதிரவனின் காலைக் கதிர்களின் தன்மை குறைந்தும் உச்சிக்கதிர்களின் வெப்பம் மிகுந்தும் காணப்படுகிறது.

சில நட்சத்திரங்கள் சில நேரத்தில் அதிகமாக மின்னியும் சில நேரத்தில் குறைந்து மின்னியும் தோன்றுகின்றன. இதற்குக் காரணம் சில நேரத்தில் புகைவெளியில் வெப்பநிலை உடனுக்குடன் மாறுபட்டு அசைவுகள் அதிகமாக ஏற்படுவதாலும் சில நேரத்தில் வெப்ப நிலை ஒரே தன்மையாக இருந்து அசைவேதும் இல்லாமலிருப்பதாலுமாகும்.

வெய்யில் காலங்களில் பூமியிலிருந்து ஆவி கிளம்பி மேல் நோக்கிப் போவதை நாம் காண்கிறோம். அப்பொழுது அதற்கு அடுத்து இருக்கும் பொருள்கள் அசைவதை நாம் பார்க்கலாம். இதே தன்மையில்தான் நட்சத்திர ஒளி புகைவெளியைக் கடந்து பூமியைச் சேரும்போது நட்சத்திரங்களின் மின்னுதல் ஏற்படுகின்றன.



தையற் கலை

கே.பி.சுந்தரம், G.C.T.

முன்பக்கம் நீளமான யோக் ப்ராக்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

14-ல் இருந்து 11 வரை $5\frac{1}{2}$ அங்.
14-ல் இருந்து 8 வரை $7\frac{1}{4}$,,
($\frac{1}{4}$ மார்பளவு $+1\frac{1}{4}$ அங்.)
15-ல் இருந்து 13 வரை $6\frac{1}{2}$,,
15-ல் இருந்து 9 வரை $\frac{3}{4}$,,
16-ல் இருந்து 11 வரை $5\frac{1}{4}$,,
17-ல் இருந்து 16 வரை $\frac{1}{2}$,,
18-ல் இருந்து 16 வரை நேர்க்கோடு இணைக்க.
19-ல் இருந்து 11 வரை 2 அங்
20-ல் இருந்து 19 வரை $2\frac{1}{2}$,,
21-ல் இருந்து 11 வரை 3 ,,
22-ல் இருந்து 13 வரை $2\frac{1}{2}$,,



கீழ் பாவாடையின் விளக்கம்

23-ல் இருந்து 24 வரை 19 அங்.
24-ல் இருந்து 26 வரை 28 ,,
25-ல் இருந்து 23 வரை 28 ,,
26-ல் இருந்து 25 வரை 19 ,,

பாவாடையின் 25 எண் உள்ள இடத்தில் $\frac{1}{2}$ அங். படத்தில் உள்ளபடி வளைவாக வரையவும்.

A, 22, 15, 8, 17, 19, 20, 21, 12 எண்கள் வரை யோக்குடன் சேர்ந்த முன்பக்க பாடியின் இணைப்பு.

முன்பக்க யோக்கில் 15, 22 எண்கள் உள்ள இடத்தில் 2, 3, மடிப்புக்கள் வைத்து பாவாடையை இணைக்கவும்.

10, 1-க்கும் மத்தியில் இரண்டு டார்ட்டு அகலம் $\frac{3}{4}$ அங். நீளம் $2\frac{1}{2}$ அங். அமைத்துக் கொள்ளவும்.

கையின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை. $16\frac{1}{2}$ அங்.
(கை நீளம் $+1\frac{1}{2}$ அங். தோள்பக்கம் மடிப்புக்கும் தையலுக்கும்.)

2-ல் இருந்து 0 வரை $4\frac{1}{2}$ அங்.
(1/8 மார்பளவு $+1\frac{1}{2}$ அங்.)

3-ல் இருந்து 2 வரை $5\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $+\frac{1}{2}$ அங். குறைவு)

4-ல் இருந்து 1 வரை $3\frac{3}{4}$ அங்.
(முன்னங்கை லூஸ் $+\frac{1}{4}$ அங்.)

5-ல் இருந்து 0 வரை 2 அங்.

6-ல் இருந்து 5 வரை 3 ,,

7-ல் இருந்து 6 வரை $\frac{1}{2}$,,

8-ல் இருந்து 5 வரை $\frac{3}{4}$ அங்.

9-ல் இருந்து 7 வரை $\frac{3}{4}$,,

முன்னங்கையில் 4, 1 எண்கள் உள்ள இடத்தில் $1\frac{1}{2}$ அங்குலத்தில் (பால்சன்) துண்டு திருப்பித் தைக்கவும்.

அரை கையின் விளக்கம் படத்தில் உள்ளபடி வரைந்துகொள்க.

விளக்கப்படத்தின் வடிவம்போன்று அமைந்துள்ளதா என்று பார்த்து வெட்டவும்.

Regd. No. M 6296 MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் **வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை**

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.

எழுதியவை

கண்ணீரும் செந்நீரும்

வளர்த்த கழகம் 0—12—0

மறைந்த திராவிடம் 0— 3—0

இரா. செழியன் M. A.

எழுதியவை

ராஜாடி ராஜா 0—12—0

பொது அறிவு 0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு :

நிர்வாகி, **மன்றம் பதிப்பகம்,**

26, நைனியப்பன் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

புதிய வெளியீடு!

தையற்கலை

ஆசிரியர் : K. P. சுந்தரம் G. C. T.

பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் உரிய பல வித உடைகளை வெட்டித் தைக்கும் முறை இந்நூலில் 50-க்கு மேற்பட்ட விளக்கப் படங்களுடன் வரையப்பட்டுள்ளது. ஆசிரியர் துணையின்றித் தாமே வெட்டித் தைப்பதற்குச் சிறந்த நூலாகும். எவரும் எளிதில் கற்றுக் கொள்ளலாம். தமிழில் முதன் முதல் வெளிவரும் தையற்கலைப் புத்தகமாகும்.

பெண்ணின் பெருமைக்குச் சிறந்த கலைத்துறை ஏடாகும். அரசாங்கத் தேர்வில் வெற்றி பெற விரும்பும் பெண்மணிகளுக்குப் பெரிதும் உதவி செய்யும். விலை ரூ. 2.00.

கிடைக்குமிடம் :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1